Registered as a news paper.

பக்கங்கள் : பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



உந்துசருளிகளை பழுது பார்க்கவும்
சேவிஸ் செய்யவும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

இரத்தினம் சேர்விஸ் சேவைத்தளம்

30, 32, சிறாம்பியடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

காலை 7.00 மணி முதல் மாலை 5.30 வரை
(ஞாயிறு விடுமுறை) குறித்த நேரத்தில்
சேவிஸ் செய்து தரப்படும்.



மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 27 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 28 (12.11.2004) வெள்ளிக்கிழமை இதழ்:43






# பேச்சுக்கள் குறித்த நிலைப்பாட்டை ஜனாதிபதி சந்திரிகா மாற்றவில்லை!

## செய்தியாளர் மாநாட்டில் அன்ரன் பாலசிங்கம்

(கிளிநொச்சி)


ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து விசேடமாக எந்தச் செய்தியையும் கொண்டுவராத நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சனிடம், நீண்ட பேச்சுக்களின் பின்னர் புலிகள் தரப்பு, அரசாங்கத்துக்கு செய்தியொன்றைக் கொடுத்து அனுப்பியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் இது குறித்து ஆலோசித்துவிட்டு நோர்வேத் தரப்பு புலிகளுக்கு விரைவில் அறிவிக்கும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்று நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனை சந்தித்துப் பேசிய பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில் –


(11 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் இணைந்து நடத்திய செய்தி யாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில் – (11 ஆம் பக்கம் பார்க்க)



# பலஸ்தீன அதிபர் அரபாத் நேற்று அதிகாலை மரணம்



(பாரிஸ்)

இரண்டு வாரங்களாக பாரிஸிலுள்ள இராணுவ மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த பலஸ்தீன அதிபர் யாசிர் அரபாத் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை மரணமடைந்தார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி ரமலாவிலிருந்து பிரான்ஸுக்குக் கொண்டுசெல்லப்பட்ட பலஸ்தீன அதிபர் யாசிர் அரபாத்துக்கு பேர்சில் இராணுவ மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டது. அங்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் பலனளிக்காத நிலையில் கடந்த 3 ஆம் திகதி அரபாத் கோமா நிலையை அடைந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அர (12 ஆம் பக்கம் பார்க்க)

# யாசிர் அரபாத்தின் இறப்புக்கு விடுதலைப் புலிகள் வருத்தம்

(கிளிநொச்சி)

பலஸ்தீன அதிபர் யாசிர் அரபாத்தின் இறப்பு பலஸ்தீன மக்களுக்கு ஓர் பேரிழப்பு. அவரின் இழப்புக்காக விடுதலைப் புலிகள் வருந்துகின்றனர் என்று நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் அனுப்பிய

# செய்தியை சந்திரிகாவுக்கு பீற்றர்சன் கையளித்தார்!

(கொழும்பு)

வன்னியிலிருந்து கொழும்பு திரும்பிய நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் நேற்றிரவு ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் புலிகள் தரப்பிலிருந்து அனுப்பப்பட்ட செய்தியைக் கையளித்தார்.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து நேற்றிரவு பீற்றர்சன் எகிப்துக்குப் பயணமானதாகத் தெரியவருகிறது.

அதேவேளை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் இலங்கையிலேயே தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# காணாமற்போன மீனவரின் சடலம் கரையொதுங்கியது

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைக் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது - கடற்கொந்தளிப்பினால் கடலில் தூக்கி வீசப்பட்டு காணாமற்போன மீனவரின் சடலம் காங்கேசன்துறை கரையில் ஒதுங்கியது.

நேற்றுமுன்தினம் காங்கேசன்துறை கடற்கரையில் பழுதடைந்த நிலையில் கரைஒதுங்கிய இந்தச் சடலம் காணாமற்போன எஸ்.கருணாகரன் (வயது 43) என்பவருடையதென அடையாளம் காணப்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சொந்த இடமாகக் கொண்ட இந்த மீனவர் வல்வெட்டித்துறையில் வசித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நான்கு மணிநேரம் நீடித்த பிரபா - பீற்றர்சன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான அனுசரணையாளர் குழுவினர் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்து நீண்ட நேரம் பேச்சு நடத்தினர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் விமானப்படையின் ஹெலிகொப்ரர் மூலம் கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தை வந்தடைந்த நோர்வே அனுசரணையாளர் குழுவினரை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வரவேற்றார்.

பின்னர் - தமிழீழ காவல்துறையின் விசேட பாதுகாப்புடன் விடுதலைப் புலிகளின் சமாதானச் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழு - புலிகள் மன்னாரில் சந்தித்துப் பேச்சு!

(மன்னார்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குமிடையிலான சந்திப்பு ஒன்று மன்னாரில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணிக்கு மன்னார் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் தலைமையிலான குழுவினர் இந்தச் சந்திப்பில் பங்குகொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது எதிர்வரும் மாவீரர் நாளுக்காக ஏனைய மாவட்டங்களுக்கான வீதிகளை 24 மணிநேரம் திறப்பது குறித்து ஆராயப் பட்டது.

(201)

## தோட்டத்தில் வேலை செய்த வயோதிபர் மரணம்

தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்த வயோதிபர் தலைச் சுற்றில் தூக்கி வீசப்பட்டு மரணம டைந்தார்.

கெருடாவில் கிழக்குத் தொண் டைமானாறைச் சேர்ந்த 10 பிள் ளைகளின் தந்தையாகிய கறுப்பாசி கணபதி (வயது 60) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல் லப்பட்டு, மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக் கப்பட்டது. (12)

## ஸ்கந்தவரோதயா கல்லூரியின் 110 ஆவது ஆண்டு நிறைவு

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் நூற்றிப்பத்தாவது ஆண்டு நிறைவு விழாவும், முன்னை நாள் வைத்தியக் கலாநிதி காலஞ் சென்ற எஸ்.சுப்பிரமணியம் (பி.எஸ்) ஞாபகார்த்த சிலை திறப்புவிழாவும், சிறப்பு மலர் வெளியீடும் நாளை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை முன்றலில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க.சிவாஜி தலை மையில் நடைபெறும் இந்த விழா வில் - பிரதம விருந்தினராக அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொள்வார். கல்லூரி ஸ்தாபகரின் குடும்ப உறுப்பினர் திருமதி சரஸ் வதி தர்மலிங்கம், ஸ்தபாகர் சுப்பி ரமணியத்தின் சிலையைத் திரை நீக்கம் செய்து வைக்கவுள்ளார்.

பிரதம விருந்தினரால் 110 ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் இரண்டு மாடிக்கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்படும். 110 ஆவது ஆண்டு சிறப்பு மலரை முன் னாள் வைத்தீஸ்வராக் கல்லூரி அதி பர் சி.சிவசரவணபவன் (சிற்பி) வெளி யிட்டுவைக்க, முதற்பிரதியை முன் னாள் உப்புக்கூட்டுத்தாபன முகாமை யாளர் ச.ஸ்ரீராமநாதன் பெற்றுக் கொள்வார். (101)

## கலை நிகழ்வு

தொண்டைமானாறு செல்வச்சந் நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆசிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இடம் பெற்றுவரும் கலை நிகழ்ச்சி வரிசை யில், இன்று காலை 10.30 மணிய ளவில் மல்லாகம் மகாவித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளது. (14)

## வீதி விபத்தில் இளைஞர் காயம்

(பருத்தித்துறை)

நெல்லியடியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற மோட் டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

பருத்தித்துறை கல்லூரி வீதி யைச் சேர்ந்த கனகரட்ணம் பிரதீப் (வயது 21) என்பவரே காயமடைந்த வராவார். இவர் மோட்டார் சைக்கி ளில் செல்லும்போது - பின்னால் வந்த மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளாகி காலில் காய மடைந்தார். இவ்வாறு காயமடைந்த இவர் மந்திகை ஆதாரவைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டார். (14)

## இயமசம்ஹார உற்சவம்

நல்லூர் சிவன்கோவிலில் இன்று மாலை இயமசம்ஹார உற்சவம் இடம்பெறவுள்ளது. இன்று பகல் இரண்டு மணிக்கு இடம்பெறவுள்ள பூசைகளையடுத்து மாலை 4.30 மணியளவில் இயமசம்ஹார உற் சவம் இடம்பெறவுள்ளது.

## கலந்துரையாடல் இடமாற்றம்

யாழ்.மாவட்டத்தின் கல்வி அபி விருத்தி தொடர்பாக, இன்று காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலையில் நடைபெறவி ருந்த கல்வித் திணைக்கள அதிகாரி களுடன் ஆராயும் உயர்மட்டக் கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் இடமாற்றம் செய் யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு யாழ்.கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடை பெறும் என தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.


உ
சிவமயம்

யமசங்காரம்

நல்லூர் சட்டநாதர் சிவன் தேவஸ்தானத்தில் ஐப்பசி வெள்ளி - இன்று மாலை 6.00 மணிக்கு வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

அனைவரும் வருக! சிவனருளைப் பெறுக!

பிரதம குரு
பிரம்மஸ்ரீ தானு - வாசுதேவக்குருக்கள்.
(சங்கீத சாகரன்)

சுபம்.

(979) உபயகாரர்.

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
இந்தியன் புரூஸ்லி தனுஷ், தியா நடித்த
ட்ரீம்ஸ் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.30, 6.30, 9.00 (பு.நே) (சி-3319)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான

அஜித் இருவேடங்களில், பூஜா நடித்த
அட்டகாசம்
பு.நே 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
R.B.சௌத்திரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த

சத்ரபதி (ரீல்ஸ்)
முற்பதிவுகளுக்கு
யாழ்.பெயின்ற் காடன், நாகம்ஸ் சினிமா
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00.10.00 (பு.நே)

நிறஞ்சனாஸ் சங்கானை
ரவி கிருஷ்ணா, சோனியா அகவர்வால் நடித்த
7/G றெயின்போ காலனி
கேம்பஸ் (ரீல்ஸ்) (சி-2723)
விசேட காட்சி: இரவு 9.00 மணிக்கு (பு.நே)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)



# கிளிநொச்சி மாவட்டத்தில்

தமிழ் மாணவர் ஒன்றியம் -
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின்

இணைந்த ஆதரவுடன்

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

# நடாத்தும்

க.பொ.த (சா/த) – 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை ( பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும்) கிளிநொச்சி மாவட்டத்தில் இலவசமாக நடாத்தவுள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகளும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றலாம்


கிளிநொச்சி மாவட்டத்திற்கான கருத்தரங்கு நடைபெறும் நிலையங்கள்

காலம் :- 12,13,14.11.2004 (கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்)

| | | |
|---|---|---|
| 01. | பூநகரி | பூநகரி மகாவித்தியாலயம் |
| 02. | முழங்காவில் | முழங்காவில் மகாவித்தியாலயம் |
| 03. | ஜெயபுரம் | ஜெயபுரம் அ.த.க. பாடசாலை |
| 04. | பளை | பளை மத்திய கல்லூரி |
| 05. | தருமபுரம் | தருமபுரம் மகா வித்தியாலயம் |
| 06. | முரசுமோட்டை | முருகானந்தா மகா வித்தியாலயம் |
| 07. | வட்டக்கச்சி | வட்டக்கச்சி மகாவித்தியாலயம் |
| 08. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் மகா வித்தியாலயம் |
| 09. | அக்கராயன் | அக்கராயன் மகாவித்தியாலயம் |
| 10. | இரணைமடு | கனகாம்பிகை அ.த.க.பாடசாலை |
| 12. | கனகபுரம் | கனகபுரம் மகா வித்தியாலயம் |
| 12. | உருத்திரபுரம் | கிளிநொச்சி இந்துக் கல்லூரி |
| 13. | கிளிநொச்சி நகர் | கிளிநொச்சி மகாவித்தியாலயம் |
| 14. | கிளிநொச்சி நகர் | கிளிநொச்சி மத்திய கல்லூரி |
| 15. | விசுவமடு | பிரமந்தனாறு மகா வித்தியாலயம் |

# இலங்கைத் தமிழர் நலனுக்கு எதிராக இந்திய அரசு நடவடிக்கை எடுக்காது!

## வைகோ விடம் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளிப்பு





(புதுடெல்கி)

**இலங்கைத் தமிழர்களின் நலனுக்கு எதிராக இந்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காது என்று, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவிடம் பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித்தார்.**

**இந்தியா - இலங்கை இடையிலான உத்தேச பாதுகாப்பு உடன்பாடு தொடர்பாக, நேற்றுமுன்தினம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த வைகோ தனது எதிர்ப்பைத் தெரிவித்தபோதே, அவரிடம் இந்த உறுதிமொழியைப் பிரதமர் அளித்தார்.**

**உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றும் பலாலி விமான தளத்தை இந்தியா சீரமைத்துக் கொடுத்தல் தொடர்பான உடன்பாடு ஆகியவற்றில் இந்தியா கையெழுத்திடக்கூடாது என்று வலியுறுத்தி பிரதமரிடம் வைகோ மனு ஒன்றைக் கையளித்தார்.**

இல்லத்தில் சுமார் 30 நிமிடங்களுக்கு மேல் நீடித்த இந்தச் சந்திப்புக்கு பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துக்கூறிய வைகோ-

இந்தியா - இலங்கை இடையே ஏற்படவுள்ள உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தம், பலாலி விமானத் தளத்தை இந்தியா சொந்தச் செலவில் சீரமைத்துக் கொடுத்தல் தொடர்பான உடன்பாடு ஆகியவற்றால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக எனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தேன்.

ஆனால், இலங்கைத் தமிழர்களின் நலனுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் இந்திய அரசு எடுக்காது எனப் பிரதமர் உறுதியளித்தார். உத்தேச உடன்பாடு தொடர்பாக மிகவும் கவனத்துடன் செயற்படப்போவதாகவும் கூறினார்.

அத்துடன், இலங்கையில் அமைதிப் பேச்சுவார்த்தை வெற்றியடைய வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

உடன்பாடு செய்துகொள்ள வேண்டியதற்கான பல்வேறு காரணங்களையும் பிரதமர் விளக்கமாகக் கூறினார்.

பிற நாடுகள், குறிப்பாக பாகிஸ்தானின் ஆதிக்கம் இலங்கையில் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நோக்கத்தில்தான், பாதுகாப்புத் துறையில் இலங்கைக்கு இந்தியா ஒத்துழைக்க விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

தனது எதிர்ப்பை ஆழமாகத் தெரிவிக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட மூன்று பக்க மனுவை வைகோ பிரதமரிடம் கையளித்தார்.

அந்த மனுவில், இந்தியா - இலங்கை இடையிலான உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தம், இலங்கைத் தமிழர்களுக்கு மீண்டும் மிகுந்த துயரத்தை அளிக்கப்போகின்றது என்ற மனவேதனையுடனும், வலியுடனும் இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன்.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெளியிட்ட அறிக்கை குறித்து நான் கவலை தெரிவித்தபோது, இந்தியா அதுபோன்ற எந்த உடன்படிக்கையையும் செய்யாது என முன்னர் உறுதியளித்தீர்கள்.

ஆனால், இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவின் டெல்கிப் பயணம் தொடர்பாக பத்திரிகைகளில் வந்த செய்திகளைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றும் பலாலி விமானத் தளத்தைச் சீரமைத்தல் தொடர்பான உடன்பாடு ஏற்படவுள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

பலாலி விமான தளம்தான், யாழ்ப்பாணத் தமிழர்கள் மீது இலங்கை விமானப்படை தாக்குதல் நடத்துவதற்கான முக்கிய தளமாகப் பயன்படுத்தப்பட்டது. அந்தப் படையின் குண்டுவீச்சில் ஏராளமான மருத்துவமனைகள், பள்ளிகள், வழிபாட்டுத் தலங்கள் தரைமட்டமாயின. அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர். 5 லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் வீடுகளை இழந்து காடுகளுக்கும் மற்ற பகுதிகளுக்கும் பாதுகாப்புத் தேடி ஓடினர்.

யாழ்ப்பாணத்தைச் சுற்றி தமிழர் பகுதிகள் நாசப்படுத்தப்பட்டிருப்பது குறித்து ஐ.நா.சபை அதிகாரிகளும், அமெரிக்க அரசும் கவலை தெரிவித்துள்ளன. ஜப்பான், பிரிட்டன் உட்பட உலக நாடுகள், தமிழர் பகுதிகளைச் சீரமைக்க நிதியுதவி அளிப்பதாக அறிவித்துள்ளன.

எல்லாம் சரியான திசையில் செல்லும்போது, அமைதிப் பேச்சுவார்த்தையைக் குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் சந்திரிகா. அத்துடன் சீனா மற்றும் பாகிஸ்தானிடம் இருந்து ஏராளமான ஆயுதங்களை வாங்கிக் குவித்துள்ளது இலங்கை. இது தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கான தயார் நடவடிக்கையாகவே கருதப்படுகிறது.

மீண்டும் தமிழர்களுக்கும், இலங்கை அரசுக்கும் மோதல் ஏற்பட்டால், பலாலி தளத்தை இலங்கை அரசு தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குப் பயன்படுத்தும். இலங்கையின் சதி வலையில் இந்தியா ஏன் சிக்க வேண்டும்? தமிழர்களை அழிக்க இந்தியா ஓர் ஆயுதமாக இருந்தது என்ற அவப்பெயர் தேவைதானா?

'சயுரா' என்ற இலங்கைக் கப்பலையும் இந்தியா தனது சொந்தச் செலவில் பழுது பார்த்துத் தர உறுதியளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. தமிழக மீனவர்கள் மீது சுமார் 500 முறைக்கும் மேல் தாக்குதல் நடத்தி, பலரைக் கொன்றுள்ளது இலங்கைக் கடற்படை. அதற்காக, இலங்கைக்கு இந்தியா அளிக்கும் வெகுமதியா இது?

எனவே, பலாலி விமானத் தளத்தைச் சீரமைத்தல் மற்றும் இலங்கைக் கப்பலைப் பழுது பார்த்தல் தொடர்பான உத்தேச ஒப்பந்தத்தைக் கைவிடவேண்டுமென்று தனது மனுவில் கூறியுள்ளார் வைகோ.

இந்தப் பிரச்சினை தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரையும் வைகோ சந்தித்துப் பேசினார்.

# மாவீரர் நாள் நிகழ்வுகளை படையினர் குழப்பமாட்டார்கள்!

## வவுனியா சந்திப்பில் உறுதியளிப்பு



மாவீரர்நாள் நிகழ்வுகளுக்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் எவ்விதஇடையூறுகளும் விளைவிக்கமாட்டார்கள் என வன்னிப் படைத்தரப்பு உறுதிமொழி அளித்துள்ளது.

வவுனியா போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில்-

இந்தமுறை மாவீரர் தின நிகழ்வுகளுக்கு படைத்தரப்பினர் எவ்வித இடையூறுகளையும் விளைவிக்கக்கூடாது என வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் விடுத்த கோரிக்கையை அடுத்தே படையினரும் பொலிஸாரும் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பில், இராணுவத்தினரின் தரப்பில் சிறிநாத் ராஜபக்ஷ தலைமையிலான அதிகாரிகளும், பொலிஸார் தரப்பில் நெவில்குருகே தலைமையிலான அதிகாரிகளும், அரசதரப்பில் வவுனியா மாவட்ட மேலதிக அரசஅதிபர் எல்.ரகுநாதபிள்ளையும், விடுதலைப் புலிகளின் சார்பில் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல், மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் அலை, மாவட்ட துணை அரசியற் துறைப்பொறுப்பாளர் தர்மேந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது - வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் குற்றசெயல்களைக் கட்டுப்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகளைத் தம்முடன் இணைந்து செயற்படுமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

இவற்றை விட இந்தச் சந்திப்பில் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு புனரமைப்பு, விவசாயம் செய்ய அனுமதித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# தமக்கான அரசியல் சாசனத்தை உருவாக்க தமிழருக்கு உரிமையுண்டு

## மாவை சேனாதிராஜா தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ மக்கள் தங்களுக்கான அரசியல் சாசனத்தை உருவாக்கிக் கொள்ள அனைத்து உரிமையும் உண்டு என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற தமிழீழ சட்டக் கல்லூரியின் புதிய கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் பங்கேற்றுப் பேசிய மாவை சேனாதிராசா -

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எப்போது அமைதி உடன்பாடு ஏற்பட்டதோ அப்போதே இலங்கைத் தீவுக்குள் இரண்டு தேசங்கள் உள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

இலங்கை நீதித்துறை மீதான தமிழர்களின் நம்பிக்கையின்மைதான் தமிழர்களை ஆயுதப்போராட்டத்துக்குத் தள்ளியது.

இலங்கையின் நீதித்துறை மற்றும் பொலிஸ் ஆகியவைதான் இலங்கையில் மிகவும் ஊழல் நிறைந்த துறைகள் என்று ஜனாதிபதி சந்திரிகாவே கூறியுள்ளதாக இன்று செய்திகள் வெளிவந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நிதிச்சவால் திட்டப் பட்டியலில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது

(கொழும்பு)

அமெரிக்க அரசின் நூற்றாண்டு நிதிச் சவால் திட்டத்தின்கீழ் உதவிபெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் நூற்றாண்டு நிதிச் சவால் திட்டத்தின்கீழ் உதவி பெறும் நாடுகளின் பட்டியலை நேற்றுமுன்தினம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்.டபிள்யு.புஷ் வெளியிட்டார்.

இந்தத் திட்டத்தின்கீழ் 2005 ஆம் ஆண்டுக்கான நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்குத் தகுதியுடைய நாடுகளாக

ஆர்மேனியா, பெனிஸ், பொலிவியா, ஜோர்ஜியா, கானா, ஹொண்டுராஸ், லெசோதோ, மடகஸ்கார், மாலி, மொங்கோலியா, மொசாம்பிக், நிக்கரகுவா, செனகல், இலங்கை, ஆகிய நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிதித்திட்டத்தின்கீழ் இந்த நாடுகளுக்கு 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி உதவியாக வழங்கப்படவுள்ளது.

இந்த நிதி உதவியைப் பெற்றுக்கொள்ளும் நாடுகள் இந்த நிதியை நீதி, நிர்வாகத்தை ஏற்படுத்துதல், முதலீட்டு ஊக்குவிப்புக்களை ஏற்படுத்துதல், பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றில் அதிக நாட்டம் செலுத்தவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*

# இந்திய - பாகிஸ்தான் போட்டிக்காக கொல்கத்தாவில் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொல்கத்தா)

இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியையொட்டி கொல்கத்தாவில் பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் அணி தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவு பெற்றதை அடுத்து கொல்கத்தாவில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் சிறப்பு ஒருநாள் கிரிக்கெட் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்காக இன்ஸமாம தலைமையிலான பாகிஸ்தான் அணி நேற்றுமுன்தினம் இரவு இந்தியா வந்தது. கொல்கத்தா ஆடுகளம் மதிப்புமிக்க இந்த ஆட்டத்துக்காக விழாக்கோலம் பூண்டுள்ளது.

கண்காட்சிப்போட்டி என்றாலும், டெண்டுல்கர், கங்கூலி, ராவிட், ஷேவாக், லக்ஷ்மன் உள்ளிட்ட அனைத்து இந்திய நட்சத்திர வீரர்களும் இந்தப் போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

அதுபோல் இன்ஸமாம், மலிக் அக்தர், சமி, யுகானா உள்ளிட்ட பாகிஸ்தான் முன்னணி வீரர்களும் இந்தப் போட்டிக்காக இந்தியா வந்திருக்கின்றனர்.

பாகிஸ்தான் அணி இந்தியா வருவதையொட்டி - கொல்கத்தா ஆடுகளத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. பாகிஸ்தான் வீரர்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாத வகையில் 3 ஆயிரம் பொலிஸார் மைதானத்தை சுற்றிலும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதுமட்டுமன்றி பாகிஸ்தான் வீரர்கள் செல்லும் பேருந்தின் முன்னும், பின்னும் பாதுகாப்பாக துப்பாக்கி ஏந்திய பொலிஸ் ஜீப் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த 99 ஆம் ஆண்டு பாகிஸ்தான் கடைசியாக இந்தியா வந்தது. அப்போது கொல்கத்தாவில் நடந்த போட்டியில் இந்தியா தோல்வி நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனால் கொல்கத்தா ரசிகர்கள் கோபடைந்து பாகிஸ்தான் வீரர்கள் மீது போத்தல்கள் மற்றும் உணவுப் பொட்டலங்களைத் தூக்கி வீசினர்.

இதனால் ஆட்டம் நிறுத்தப்பட்டு, மைதானத்தில் இருந்து ரசிகர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். வரலாற்றில் முதல் முறையாக ரசிகர்கள் யாரும் இல்லாமல் சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. இந்த ஆட்டத்தில் கடைசியில் பாகிஸ்தான் வெற்றி பெற்று தொடரை வென்றது.

முந்தைய மோதல் பரபரப்பு மிகுந்து காணப்பட்டதால், இந்த முறை அதுபோன்ற அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் இருப்பதில் பொலிஸார் அதிக அக்கறை காட்டி வருகின்றார்கள்.

நடக்கவிருக்கும் மோதல் பற்றி பாகிஸ்தான் கப்டன் இன்ஸமாம் கூறுகையில் - 99 ஆம் ஆண்டு ஏற்பட்ட அனுபவம் வித்தியாசமான சூழ்நிலை. தற்போது இருநாட்டு ரசிகர்களின் மனநிலையும் மாறி விட்டது. எங்களுக்கு இந்திய ரசிகர்கள் உற்சாகமான வரவேற்புக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது எனத் தெரிவித்தார்.



ரைம் சஞ்சிகை நடத்திய 2004 ஆம் ஆண்டின் 'ஆசிய நாயகர்கள்' போட்டியில் இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இருபது பேரில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதற்காக சியோலில் புதன்கிழமை நடைபெற்ற விழாவில் தனது சந்தோஷத்தை வெளிப்படுத்துகிறார் முரளிதரன். 40 வயதுக்குட்பட்ட 20 பேரை ஆசியாவிலிருந்து தேர்ந்தெடுத்துள்ளது ரைம்.




# அவுஸ்ரேலியாவுக்கான பயணத்தில் பிளெமிங் கலந்துகொள்வாரா?

## காய்ச்சலால் அவதி



நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இந்த மாதம் 18 ஆம் திகதி முதல் அவுஸ்ரேலியாவுடன் டெஸ்ட் போட்டியில் மோதவுள்ளது. இந்த நிலையில் நியூஸிலாந்து கப்டன் ஸ்ரீபன் பிளெமிங் வைரஸ் காய்ச்சல் காரணமாக அவதிப்பட்டு வருகிறார்.

உடல் நலக்குறைவு காரணமாக இவர் அவுஸ்ரேலியாவில் நடக்கும் பயிற்சிப் போட்டியில் ஆடுவாரா என்பது இன்னும் முடிவுசெய்யப்படவில்லை.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் முதுகுவலி காரணமாக பிளெமிங் ஆடவில்லை.

இந்த நிலையில் காய்ச்சல் நோய் அவரைத் தாக்கியிருப்பது நியூஸிலாந்து அணிக்குப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு பிளெமிங் சூதாட்ட பிரச்சினையொன்றைக் கிளப்பி அதிக பரபரப்பை உண்டாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுழற்பந்து வீச்சைச் சமாளிப்பதற்கு அவுஸ்ரேலியாவுக்கு பயிற்சி போதாது

## பயிற்சியாளர் புச்சானன்

(டுபாய்)

அவுஸ்ரேலியக் கிரிக்கெட் வீரர்கள் சுழற்பந்து வீச்சை சமாளிக்க இன்னமும் போதிய அளவில் கற்றுக் கொள்ளவில்லை என்று அவுஸ்ரேலிய அணியின் கிரிக்கெட் பயிற்சியாளர் ஜோன் புச்சானன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இந்திய அணியுடன் நடைபெற்ற 4 ஆவது கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி தோல்வியுற்றதே இதற்கு சரியான உதாரணம் என்று புச்சானன் விளக்கமளித்துள்ளார்.

துபாயில் வெளியான 'காலீஜ் டைம்ஸ்' பத்திரிகையில் அவர் கூறியதாக வந்துள்ள செய்தி விபரம் -

முதல் 3 டெஸ்ட்களின் முடிவைப் பார்த்தபோது அவுஸ்ரேலிய அணியினர் துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயற்பட்டிருக்கின்றார்கள் என்றே நினைத்தேன். ஆனால் கடைசி டெஸ்ட் அந்த எண்ணம் தவறு என்று நிருபித்தது.

உலக அளவில் துடுப்பாட்டத்தில் நம்பர் 1 என்பது உண்மையாக இருந்தால் 107 ஓட்டங்களைக் குவித்து வெற்றிபெற்றிருக்க வேண்டுமே.

மும்பை ஆடுகளத்தின் 'பிட்ச்' மோசம் என்பதை மறுப்பதற்கில்லை. என்றாலும் குறைந்த ஓட்ட இலக்கை விரட்டிப் பிடித்திருக்கவேண்டும். 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி என்பது ஏற்றுக்கொள்ளமுடியாது.

இது குறித்து சர்வ தேச கிரிக்கெட் சபை விசாரிக்கக் கேட்டுக்கொள்வேன். இருந்தாலும் பிட்சின் தன்மையை மட்டுமே தோல்விக்கு காரணமாகக் கூறமுடியாது.



முதல் இனிங்ஸிலேயே அதிக ஓட்டங்களை எடுத்திருக்க வேண்டும். இந்தியாவின் வி.வி.எஸ்.லக்ஷ்மன் அவுஸ்ரேலிய அணிக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியது கவனிக்கத்தக்கது.

தொடரை வென்றிருந்தாலும் 3-0 என்ற கணக்கில் முழுவதுமாகக் கைப் பற்ற முடியாததற்கு லக்ஷ்மனின் சிறப்பான ஆட்டமும் ஒரு காரணம்.

சச்சின் டெண்டுல்கரைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. அதிபுத்திசாலி அவர். இருப்பினும் லக்ஷ்மனின் ஓட்டக் குவிப்பு அவுஸ்ரேலிய அணிக்கு பாதகமாக அமைந்து விட்டது.

இந்த இரு துடுப்பாட்ட வீராகள் விடயத்திலும் அதிக கவனமாக இருக்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# நடுவரைத் திட்டிய மக்மிலனுக்கு அபராதம்



(வெலிங்ரன்)

நடுவரைத் திட்டிய நியூஸிலாந்து வீரர் மக்மிலனுக்கு 25 சதவீத அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்து அணி சமீபத்தில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக 2 டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் மோதியது. 2 டெஸ்ட் போட்டிகளில் வெற்றிபெற்று தொடரை வென்ற நியூஸிலாந்து தொடர்ந்து நடந்த 3 ஒருநாள் போட்டிகளிலும் வெற்றி வாகை சூடியது.

கடைசி ஒருநாள் போட்டியின்போது நியூஸிலாந்து வீரர்கள் மக்மிலன் மற்றும் ஸ்ரைறிஸ் ஆகியோர் சர்வதேச கிரிக்கெட் விதிகளை மீறி நடுவரின் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக விசாரணை நடத்திய போட்டி நடுவர் அலன், மக்மிலனுக்கு சம்பளத்தில் 25 சதவீதம் அபராதம் விதித்தார். இன்னொரு வீரரான ஸ்ரைறிஸ் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டார். அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மக்மிலன் இடம்பிடிக்கவில்லை.

# பிளெமிங்கின் குற்றச்சாட்டை இந்திய தரகர் நிராகரித்தார்!

இந்திய சூதாட்ட தரகர் கேத்தர் பால் 99 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தின் போது தனக்கு லஞ்சம் கொடுக்க முன்வந்தார் என்று நியூஸிலாந்து அணி கப்டன் பிளெமிங் குற்றம் சாட்டினார்.

ஏற்கனவே சூதாட்ட பிரச்சினையில் சிக்கித் தவிக்கும் சர்வதேச கிரிக்கெட்; பிளெமிங்கின் குற்றச்சாட்டால் அதிக பரபரப்பு அடைந்தது. இந்த நிலையில் கேப்தர்பால் பி.பி.சி நிருபரிடம் கூறுகையில் -

பிளெமிங் சொல்வதில் எந்த உண்மையும் இல்லை. 99 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப்போட்டி ஜூன் மாதத்துடன் முடிந்து விட்டது. ஆனால் நான் ஜூலை 30ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 3 ஆம் திகதி வரை இங்கிலாந்தில் இருந்தேன். இதை என் பாஸ்போர்ட்டைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

பிளெமிங் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இன்னொரு சந்தர்ப்பத்தில அவரை நான் சந்தித்தேன். அப்போது கவுண்டி கிரிக்கெட் போட்டியில் அவர் ஆடினார்.

இந்தியாவில் தனக்கு விளம்பர முகவர் ஒருவர் தேவை என்று கேட்டுக்கொண்டதால் நான் இதற்கு ஒத்துக்கொண்டேன். இதற்கான ஒப்பந்த விபரம் என்னிடம் இருக்கிறது. பிளெமிங் சொல்வது போல் லஞ்சமாக பணம் எதையும் நான் கொடுக்கவில்லை.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக பிளெமிங் மீது வழக்குத் தொடுப்பது குறித்து யோசித்து வருகிறேன் என்று கேத்தர்பால் கூறினார்.

# தொடக்க வீரர் இடத்தை ஷேவாக்கிற்கு விட்டுக்கொடுத்தேன்

## கங்கூலி தெரிவிப்பு



(கொல்கத்தா)

தொடக்க வீரர் இடத்தை விட்டுக்கொடுத்திருப்பதாக இந்திய கப்டன் கங்கூலி தெரிவித்துள்ளார்.

காயம் காரணமாக அவுஸ்ரேலியாவுக்கு எதிரான கடைசி 2 டெஸ்ட் போட்டிகளில் ஆடாத இந்திய கப்டன் சௌரவ் கங்கூலி, கொல்கத்தாவில் கர்நாடகத்துக்கு எதிரான ரஞ்சி போட்டியில் ஆடினார்.

இந்த ஆட்டத்தில் வங்காள அணி 116 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கர்நாடக அணியைத் தோற்கடித்தது. கப்டன் கங்கூலி இந்த ஆட்டத்தில் 27 மற்றும் 5 ஓட்டங்கள் தான் எடுத்தார்.

கங்கூலியிடம் இந்திய கிரிக்கெட் அணியின் உடல் தகுதி நிபுணர் லெய்பஸ் பரிசோதனை நடத்தவுள்ளர்.

இவரின் பரிசோதனை முடிவைப் பொறுத்தே பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் கங்கூலி ஆடுவது முடிவு செய்யப்படும்.

இந்த நிலையில், கங்கூலி நிருபர்களுக்கு நேற்றுமுன்தினம் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறுகையில் -

ரஞ்சி போட்டியில் ஆடியது மகிழ்ச்சியளிப்பதாக இருக்கிறது. சர்வதேச போட்டிக்கும், ரஞ்சி கிரிக்கெட்டுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கிறது.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் தொடக்க வீரராக ஆடி நிறைய ஓட்டங்களை விளாசியிருக்கிறேன். ஆனால், ஷேவாக்கிற்கு அந்த இடத்தை நான் விட்டுக்கொடுத்துவிட்டேன்.

அவரின் அதிரடி தொடக்க ஆட்டம் என்னை மட்டுமல்ல, கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரையும் கவர்ந்திருக்கிறது. அவரின் ஆட்டம் ரசிகர்களுக்கு விருந்து படைக்கும் விதமாக இருக்கிறது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது என்றார்.

# தனியரசுக்கான அடிக்கட்டுமானங்கள் தலைவரின் சிந்தனையிலே உருவானவை!

## காவல்துறை பொறுப்பாளர் நடேசன்



(கிளிநொச்சி)

உலகில் இடம்பெற்ற விடுதலைப் போராட்டங்களிலேயே - சமகாலத்திலே தனி அரசுக்கான அடிக்கட்டுமானங்கள், நிறுவனரீதியான கொள்கைகள் வகுக்கப்பட்டு உருவாக்கப்படுவது எமது போராட்டத்தில் தான் என்று தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்தார்.

தமிழீழ சட்டத்துறைக் கல்லூரி திறப்புவிழாவில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது தலைவரின் தீர்க்கதரிசனமான சிந்தனை என்னவெனின், போராட்டம் நடைபெறும் சமகாலத்தில் இவ்வாறான கட்டமைப்பை உருவாக்குவதன்மூலம் இறுக்கமான சமூககட்டமைப்பை உருவாக்கமுடியும் என்பதாகும்.

இதனால் மிகவும் பலம்மிக்க சக்தியையும் விடுதலையைப் பெற முடியும்.

எமது போராட்ட வரலாற்றில் இந்த நிகழ்வை ஓர் படிக்கல்லாகவே பார்க்கவேண்டும். இந்த நிகழ்வு எமது தியாகத்தின் ஒரு வடிவாகவே நான் பார்க்கிறேன்.

தமிழ்மக்களின் உரிமை மறுக்கப்பட்டபோதுதான், எமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்மக்களின் உரிமை என்பதில் கல்வி, நில உரிமை என பல்வேறு உரிமைகள் அடங்குகின்றன.

எமது போராட்டம் பல வடிவங்களைக் கொண்டிருந்தாலும், இன்று சிறந்த ஒரு போராட்டமாக வளர்ந்து நிற்பதற்கு எமது தலைவரின் சிறப்பான வழிநடத்தல் தான் என்பதை மறுக்கமுடியாது.

நாம் பல்வேறு துன்பங்கள், துயரங்களுக்கு மத்தியில் தான் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

உலகத்தில் நடைபெற்ற போராடடங்களில் - தமிழீழ போராட்டம் வேறுபட்டது. உலகத்தில் இடம்பெற்ற போராட்டங்களில் சமகாலத்திலேயே தனி அரசுக்கான அரச அடித்தளங்களை, நிறுவனரீதியான கொள்கைகள் வகுக்கப்பட்டு, உருவாக்கப்படுவது எமது போராட்டத்தில்தான்.

உலகில் பல நாடுகள் விடுதலை அடைந்தும், இவ்வாறான ஒரு கட்டமைப்பு இல்லாத நிலையில், எதிர் நோக்கியுள்ளனர், எதிர் நோக்கிக் கொண்டு இருக்கின்றனர்.

எமது விடுதலைப் போராட்டம் பல்வேறுபட்ட வளர்சிகளை நோக்கி வளர்ந்து கொண்டு இருப்பதை உணரமுடிகிறது.

எம்மால விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் வாழும் மக்களின் இயல்பு வாழ்வையும், அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்களின் இயல்பு வாழ்வையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் நீதி கிடைப்பது இல்லை. நீதி மறுக்கப்படுகிறது. நீதிவழங்க நீதியாளர்களுக்கு அனுமதி இல்லை. ஊழல் மலிந்து காணப்படுகிறது.

பத்திரிகைச் செய்தியை படித்தால் தெரியும். இதை ஜனாதிபதியே ஏற்றுக்கொண்டு இருக்கிறார்.

ஊழல், மோசடிகாரர் நிறைந்த இடம் அவர்களின் நீதித்துறையும், காவல்துறையும்தான் என்றும் இதற்கு முன் நாடாளுமன்றத்திலும் சிங்கள அமைச்சர்களால் இந்த விடயம் பேசப்பட்டது.

சமகாலத்தில் இரண்டு நீதிநிர்வாகத்துறைகளையும் சர்வதேசம் ஒப்பிட்டு பார்த்து, எமது நீதிநிர்வாகத்தையும், காவல்துறையையும் பாராட்டும் அளவுக்கு - எமது விடுதலைப்போராட்டம் ஆரோக்கியமான, தீர்க்கதரிசனமான பாதையில் அமைந்துள்ளது.

எமது தலைவர் அடிக்கடி - எமது அரசகட்டுமானத்துக்கும், மக்களுக்கும் இடைவெளி இருக்கக் கூடாது என்ற கூறுவார்.

இதற்கமையத்தான் இந்த விடுதலைப் போராட்டம் மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டமாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.



அகில இலங்கை ரீதியில் இலங்கைத் புத்தாக்குநர் ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட ஆங்கில கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மாணவி சுதாயினி புத்தாக்குநர் ஆணைக்குழு செயலாளரிடமிருந்து பரிசில் பெறுவதைப் படத்தில் காணலாம். (17)



வலி. தெற்கு பிரதேச செயலக சர்வதேச சிறுவர் முதியோர் தின விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. கட்டுரைப் போட்டியில் முதலாமிடம் பெற்ற ச.சக்திதாயினிக்குப் பிரதேச செயலக பணியாளர் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## மலசலகூடம் அமைக்க உதவி

வடமராட்சி கற்கோவளம் புனித நகர் மீள் குடியேற்றத் திட்டத்தில் இங்குள்ள மக்களின் நன்மை கருதி சீ.எச்.எவ் எனும் புதிய வெளிநாட்டு நிறுவனம் - 69 மலசலகூடங்களைக் கட்டிக்கொடுக்க முன்வந்திருக்கிறது.

இடப்பெயர்வால் முகாம்களில் தங்கியிருந்த மக்களுக்கு புதிதாக புனிதநகர் வீட்டுத்திட்டம் உருவாக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்தே இந்த நிறுவனம் இங்குள்ள வீடுகளுக்கு 69 மலசலகூடங்களைக் கட்டிக்கொடுக்கவுள்ளது. (14)

## சாயிசேவா நிலையத்தில் பஜனை

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவால் பிரகடனப்படுத்தப்பட்ட அகில உலக அகண்ட பஜனை யாழ். சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை மாலை 6 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி வரை தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது.

ஆன்மீக நாட்டமுள்ளோர் இதில் கலந்துகொள்ள முடியும் என நிலைய செயலாளர் தெரிவித்தார். (111)

# றீடோ ஏற்பாட்டில் 5 மாவட்டங்களில் பொது விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிப்பு

நோர்வே நாட்டின் நிதியுதவியுடன், கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் (றடோ) கடந்த 8 ஆம் திகதி முதல் பொது விழிப்புணர்வு வாரமொன்றை அனுஷ்டித்து வருகிறது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வரை இது அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த விழிப்புணர்வு வாரம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு, றீடோ நிறுவனத்தினர் பதாகைகளைக் கட்டி, பாடசாலைகள் தோறும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

இவை தவிர கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் மெல்லக் கற்கும் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் ஆங்கிலம், விஞ்ஞானம், கணித பாடங்களுக்கான வகுப்புக்களையும் நடத்தி வருகிறது.

மேலும் பெற்றோருக்கான எழுத்தறிவூட்டல் வகுப்புக்களும் - நவாலி, கூழாவடி, சண்டிலிப்பாய், சுதுமலை, பிரான்பற்று, இளவாலை, மாதகல் ஆகிய இடங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஆறு மாதகாலமாக நடை பெற்று வரும் இந்த வகுப்புக்கள், இந்த மாதத்துடன் முடிவுறவுள்ளன.

இவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு - இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ளதாக றீடோ நிறுவனம் யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ். ஜெயக்குமார் தெரிவித்தார். (44)

## திருடர் தொல்லை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

திருடர்களின் தொல்லை தற்போது பரவலாக அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் கொக்குவில் கிழக்குப் பகுதியில் திருமண வீடொன்றில் இடம்பெற்ற சம்பவத்தில் - திருமண அலங்கார வேலைகளை முடித்து விட்டு, வீட்டிலுள்ளோர் 11 மணிக்குப் பின்பே உறங்கச் சென்றுள்ளனர்.

மறுநாட் காலை எழுந்து பார்த்த போது, அங்கு போடப்பட்டிருந்த 100 கதிரைகளில் 8 கதிரைகள் திருடப் பட்டிருந்தது தெரியவந்தது.

திருமணவீடு, மரணவீடு என்றில்லாமல் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுவதும் குறிப்பிடத்தக்கது. (111)

# சந்தைப்படுத்தல் நிலையம் அமைத்துத்தரக் கோரிக்கை

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 'மண்டான்' கிராமத்தில் வவசாய உற்பத்தியாள் தமது விவசாயப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற ஒரு விற்பனை நிலையம் இல்லையென்றும், இந்தக் குறையைப் போக்க அந்தப் பகுதியில் சந்தையொன்று அமைத்துத் தரும்படியும் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் - முன்னர் இந்தப் பகுதி மக்கள் சந்தைப்படுத்தலுக்காகப் பயன்படுத்திய பகுதியும், கட்டடமும் அழிந்து - கைவிடப்பட்ட நிலையில் காடு மண்டிக் கிடக்கும் இடத்தை துப்பரவு செய்து, சந்தைக் கட்டடம் ஒன்று அமைத்துக் கொடுப்பதற்கான முன் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும், அந்தப் பகுதியில் விரைவில் சந்தையொன்று அமையுமென்றும் மக்களுக்கு உறுதியளித்தார். (13)

# கரவெட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மின்னிணைப்புக்கு சிவநேசன் எம்.பி. உதவி

(கரவெட்டி)

கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலைக்கான மின்னிணைப்பை அந்தப் பாடசாலையின் பழைய மாணவனும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான கி.சிவநேசன் தனது சொந்தச் செலவில் செய்து கொடுத்துள்ளார்.

இந்த மின் இணைப்புக்காக 15 ஆயிரம் ரூபா செலவு செய்து, நீண்டகாலமாக மின்னிணைப்பின்றி இயங்கி வந்த இந்தப் பாடசாலைக்கு மின்னிணைப்பு வழங்கியமைக்காக- அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், மாணவர் எனப் பலரும் நன்றி தெரிவித்தனர்.

அண்மையில் இந்த மின்னிணைப்பை ஆரம்பித்து வைத்த யாழ்மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் பேசும் போது "கிராமப்புறப் பாடசாலைகள் சகல வசதிகளும் பெற்று வளர்ச்சியடைய வேண்டுமென்பதே எமது குறிக்கோள்" எனத் தெளிவுபடுத்தினார்.

விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (13)

# வேலணை கணினிப் பயிற்சி நிலைய சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

தமிழ் மாணவர்களுக்காக தனது அயராத சேவையை ஆற்றிவரும் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் ஆதரவோடு, வேலணை கணினிப் பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டு வரும் இலவசக் கணினிப் பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், புதிய பிரிவுகளின் ஆரம்ப வைபவமும் கடந்த திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் கணினிப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ப.குணேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வேலணை மத்திய கல்லூரி அதிபர் அருணகிரிநாதனும், சிறப்பு விருந்தினராக தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ச.எழிலன்பன் மற்றும் வேலணை தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் அம்பிகைபாகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், தீவக மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ஜெகன் மற்றும் வேலணை கடற்தொழிலாளர் சமாசத் தலைவர் கார்த்திகேசு ஆகியோர் ஏற்றினர்.

தேசியக் கொடியை யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் க.எழிலன்பன் ஏற்றினார்.

சிறப்புரைகளை பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் வேலணை அரசியற்துறைப் பொறுப்பாளர் யாழ். நம்பி ஆகியோர் ஆற்றினர்.

அதனைத் தொடர்ந்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வோடு, புதிய பிரிவுகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வுக்கு மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் கற்கோவளம் நலன்புரி நிலையங்கள்

தற்போது பெய்துவரும் அடைமழையால் வடமராட்சி வடக்கு, கற்கோவளம் போன்ற இடங்களிலுள்ள அகதி முகாம்களில் வாழும் மக்களின் நிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

உரியமுறையில் அமைக்கப்படாத கூரைகளாலும், மலசலகூட வசதி, குடிநீர் வசதி போன்றன இல்லாத நிலையிலும் வாழ்கின்றனர்.

அத்துடன், இந்தத் தற்காலிக குடியிருப்புக்களுக்குள் மழைநீர் உட்புகுந்த அவலமும் உள்ளதுடன், சுகாதார நிலைமையும் மிகப் பின் தங்கியுள்ளது.

எனவே இது குறித்து எந்தத் தரப்பும் உதவி வழங்க முன்வரவில்லை.

இவ்வாறு மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கப் பொது நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் முன்வர வேண்டும். அத்துடன் அவசர உதவிகளை வழங்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)



# இளைய சமுதாயத்தினர் இசையின் ஆர்வத்தை மறந்து வருகின்றனர் என்பது கசப்பான உண்மை

## சிநேகிதியே

அண்மையில் யாழ்ப்பாண நகரின் கிழக்கே கொழும்புத்துறை விபுலானந்தர் வீதியில் கீத வாஹினி இசைக் கல்லூரியை அமைத்து, இசைக் கல்வி போதிக்கும் ஆசிரியர் கிருஷ்ண வேணியைச் சந்தித்து, அவரைப் பற்றி அவரது சேவை பற்றி நேர்காணல் மூலம் அறிந்தவற்றை இங்கு தருகிறோம்.

யாழ்ப்பாணத்தின் கிழக்கேயுள்ள கொழும்புத் துறைதான் எனது பிறந்த ஊர். 1951 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் திகதி மயில்வாகனம் கனகம்மா தம்பதியினருக்கு ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்தேன். எனக்கு இரு ஆண் சகோதரர்களும், இரு சகோதரிகளும் உள்ளனர்.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் எனது ஆரம்பக் கல்வியையும், அன்றைய ஸ்ரான்லிக் கல்லூரியில் (இன்று கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்) உயர் கல்வியையும் கற்றேன்.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நான் நாலாம் வகுப்பில் படிக்கும்போது, இசையின் மேல் நான் கொண்டிருந்த ஆர்வத்தைக் கண்ட இசை ஆசிரியரான வ.பரமசாமி – உங்கள் மகளுக்குச் சங்கீதம் படிப்பியுங்கோ. என்று எனது பெற்றோருக்கு ஆலோசனை கூறினார். எனது பெற்றோர் எனது அயல்வீட்டில் வசித்து வந்த சங்கீத ஆசிரியர் பூஷணம் ச.பாலசிங்கத்தை நாடினர். அவர் தமது சகோதரியான இசை ஆசிரியை இராதாதேவி சபாபதி. நான் இசை பயிலவேண்டிய ஒழுங்குகளைச் செய்து உதவினார். இது நடந்தது 1961 ஆம் ஆண்டில். அன்று முதல் வட இலங்கை சங்கீத சபையினர் நடத்தும் ஆசிரியர் தரப் பரீட்சைவரை இராதா தேவியிடமே சங்கீதம் பயின்றேன்.

எனது இசை அறிவை மென்மேலும் வளர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன், நல்லூரில் அமைந்துள்ள அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தில் சேர்ந்து கொண்டேன்.

எனது இசைக் கல்விக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து துணைநின்றவர் எனது மூத்த சகோதரர் ம.சந்திரசேகரம் என்பதை நன்றியுடன் குறிப்பிடுவதோடு, அந்த காலங்களில் நடைபெற்ற பல இசைப் போட்டிகளில் பங்கு கொண்டு பல பரிசுகளை வென்றெடுத்தேனென் பதையும் குறிப்பிடவிரும்புகின்றேன்.

1971 ஆம் ஆண்டு கொழும்புத்துறை மேற்கு அருள்மிகு விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற மகா சிவராத்திரி விழாவில், இராதாதேவி சபாபதியின் இசை நிகழ்ச்சிக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அவர் அந்த நிகழ்ச்சிக்கு எதிர்பாராத விதமாக வருகை தர இயலாமல் போகவே, ஆலய நிர்வாகத்தினர் என்னைப் பாடுவதற்கு அழைத்தார்கள். அதுவே எனது முதல் இசை நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது.

1972 ஆம் ஆண்டில் எனது உயர் கல்வி முற்றுப் பெற்றதால், அரியாலை பாலர் கழகத்தில் ஆசிரியராகப் பணிசெய்யும் வாய்ப்பைப் பெற்றதோடு, பாலர் ஆசிரியர் தராதரப் பத்திரத்தையும் பெற்றுக் கொண்டேன்.

1972 ஆம் ஆண்டில் நடைபெற்ற வட இலங்கை சங்கீத சபையின் வாய்ப்பாட்டுக்கான ஆசிரியர்தரப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியும் பெற்றேன்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் இணைந்து, இசை



பயின்று, 1976 ஆம் ஆண்டில் டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றேன்.

1977 ஆம் ஆண்டில் மன்னார் பாத்திமா மகா வித்தியாலயத்தில் இசையாசிரியராக நியமனம் பெற்றேன்.

இந்தியாவிலிருந்து இங்கு வருகை தந்திருந்த பண்ணிசை கற்பித்துவந்த ஓதுவார்–இராஜசேகரனிடம் பண்ணிசையைப் பயிலும் வாய்ப்பைப் பெற்றேன். அதைத் தொடர்ந்து வ.பரமசாமியிடம் தொடர்ந்து பண்ணிசை பயின்று, வட இலங்கை சங்கீத சபையினர் நடத்தும் பரீட்சைக்குத் தோற்றி, அந்தச் சபை வழுங்கும் பண்ணிசைக்கான கலாவித்தகர் பட்டத்தையும் 1985 ஆம் ஆண்டில் பெற்றேன்.

1982 – 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் இசையாசிரியராகப் பணிசெய்தேன். எனது சேவைக் காலத்தில் தான், அந்த வித்தியாலயத்தில் முதன்முறையாக க.பொ.த (உயர்தரப்) பரீட்சைக்கு சங்கீத பாடத்தையும் ஒரு பாடமாகக் கற்பிக்க அனுமதிக்கப்பட்டு, அதைக் கற்பிக்கும் வாய்ப்புப் பெற்றேன். இங்கு இசைக் கல்வி பயின்ற இந்த ஊரைச்சேர்ந்த பல மாணவர்கள் பின்னர் இராமநாதன் நுண்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்று, இசை பயின்று புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இசையாசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள்.

1986 ஆம் ஆண்டில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலும், அதன் பின்னர் கனகரத்தினம் மகா வித்தியாலயத்திலும் இசை ஆசிரியராகப் பணியாற்றினேன்.

1973 ஆம் ஆண்டில் முதல் முதலாக இசைக் கல்வியைத் தனிப்பட்ட முறையில் போதிக்கத் தொடங்கினேன். இது மெல்ல மெல்ல வளர்ந்து, இன்று இருநூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் இசை பயிலும் கீத வாஹினி இசைக் கல்லூரியாக, 1994 ஆம் ஆண்டில் மலர்ந்து – வளர்ந்து இசை பரப்புகிறது.

இங்கு இசை பயின்ற மாணவர்களில் இதுவரை 36 மாணவர்கள் வட இலங்கை சங்கீத சபை– ஆண்டு தோறும் நடத்தும் ஆசிரியர் தரப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்திபெற்று, ஆசிரியர்களாகவும், வேறும் பல நிலைகளிலும் இருந்து கொண்டு இசைச் சுடர் பரப்புகின்றார்கள்.

அத்துடன், இதுவரை இந்தக் கல்லூரியின் துணையுடன் பல மாணவர்கள் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் சங்கீத டிப்ளோமாக் கற்கை நெறியைப் பயின்று, டிப்ளோமாப் பட்டம் பெற்று ஆசிரியர்களாக இந்த நாட்டிலும், கடல் கடந்த நாடுகளிலும் இசைப்பணியை இயற்றுகிறார்கள்.

இங்கு கற்கும் மாவணர்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் கூட்டுமுயற்சி, கூட்டு நிகழ்ச்சி இதில் வயலின், வீணை, மிருதங்கம், தபேலா, புல்லாங்குழல், கெஞ்சிரா கடம் ஆகிய வாத்தியங்கள் இடம்பெறுகின்றன. இந்த நிகழ்ச்சியில் கீர்த்தனைகள், பக்திப் பாடல்கள், பாரதியார் பாடல்கள் முதலானவற்றின் மெட்டுக்கள் வாத்தியங்களில் இசைக்கப்படுகின்றன. எனது நெறியாளுகையின் கீழே, இதைக் கேட்டு மகிழவெனப் பெருமளவில் மக்கள் கூடுகின்றனர். இந்த நிகழ்ச்சியை நிகழ்த்திக் காண்பிக்கும் வண்ணம் பெரும்பாலும் வாணிவிழாக் காலங்களிலேயே பாடசாலைகள், வங்கிகள், ஆலயங்கள், அரச அலுவலகங்கள் போன்ற நிறுவனங்களிலிருந்து வரும் அழைப்புக்களை ஏற்றுக் கொண்டு, அங்கெல்லாம் சென்று, நிகழ்ச்சியை நடத்துகிறோம். ரசிகர்களிடமிருந்து வரவேற்பும் பாராட்டும் கிடைக்கின்றன.

(தொடரும்...)

வயலூர் - முருகன்

# அன்புக்கு ஒரு பரிசு

எமது இல்லங்களில் பல வைபவங்கள் நடைபெறுகின்றன. இந்த வைபவங்களில் உறவினர்கள், நண்பர்கள், வேண்டப்பட்டவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். பிறந்த நாள் கொண்டாட்டங்கள், காதலர் தினம், திருமண வைபவங்கள் புதுமனை புகுவிழா, பிரிவு உபசார விழா, அறுபதாம் கலியாணம் என இப்படியான நிகழ்வுகளில் அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படுகிறது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான அன்பளிப்புப் பொருட்களை வழங்குகின்றனர். ஆனால், அந்த அன்பளிப்புப் பொருட் களின் தரத்தையும், அழகையும் யாரும் பார்ப்பதில்லை.



விலைகூடிய பொருட்களையே வாங்கி அன்பளிப்பாகக் கொடுக்கின்றோம். அப்பொழுது தான் எங்களை மதிப்பார்கள் என்ற எண்ணம் இன்றைய காலத்தில் வளர்ந்து வருகிறது. அன்புப் பரிசு வழங்கும் கலாசாரம், எங்கள் ஊரில் கூடிக் கொண்டே போகிறது.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால், அன்பளிப்புப் பொருள் வழங்குவது மட்டுமல்ல அந்த அன்பளிப்பு பொருட்களைத் தெரிவு செய்வது முக்கியமாகும்.

அதாவது நல்ல புத்தகங்களை வாங்கி அன்பளிப்புச் செய்தால், அதைப் படிக்கின்ற போது அன்பளிப்புச் செய்தவர்களின் நினைவு வரும். பிரயோசனமான புத்தகங்களை வாங்குவது அவசியமாகும். அப்போதுதான் நீங்கள் வழங்கிய அன்பளிப்புப் பொருள் பிரயோசனமானதாகவும், மதிப்புள்ளதாகவும் இருக்கும். இவ்வாறு எந்தவிதமான நிகழ்வுகளுக்கு, எவ்வாறு அன்பளிப்புப் பொருட்கள் வழங்க வேண்டும், எப்படியான அன்பளிப்புப் பொருட்களாக இருக்க வேண்டும் என்று திட்டமிடல் வேண்டும். விலை குறைந்த பொருளில் எவ்வளவு அழகான பொருட்கள் இருக்கிறது. மற்றவர்கள் எப்படி வேண்டுமானாலும் வாங்கிக் கொடுக்கலாம். ஆனால் நீங்கள் வாங்கிக் கொடுக்கின்ற பொருள் வித்தியாசமாக இருக்க வேண்டும். அப்போது தான் முதலில் அதை விரும்புவார்கள். வாங்குவர்கள் அந்தப் பொருளின் விலையை ஒரு போதும் பார்க்கமாட்டார்கள்.

வெளிநாட்டவர்கள் எந்தவொரு வைபவங்களுக்குச் சென்றாலும், பூங்கொத்தைக் கொண்டு செல்வார்கள். அந்தப் பூவின் அழகைத் தான் பார்க்கிறார்கள். எல்லோருக்கும் பிடிக்கும் என்றபடியால் அன்பளிப்புப் பொருளாகப் பூங்கொத்தைக் கொடுக்கிறார்கள்.

அதே போல் நாமும் எமது வசதிக்கேற்ப எது அழகாக இருக்கிறது. அடுத்தபடியாக முக்கியமான பொருளாக இருக்கின்றதோ, அதனை வாங்கிக் கொடுத்தால் போதுமானதாகும். மற்றவர்கள் எங்களை தரக் குறைவாக நினைப்பார்கள் என்று பார்க்கத் தேவையில்லை. அன்புக்கு ஒரு பரிசு அவ்வளவு தான். வாங்குபவர் எதையும் பெரிதாக நினைப்பவராக இருக்க வேண்டும்.

வாங்கிய அன்பளிப்புப் பொருளின் விலைக்கேற்பத் தான் வைபவங்களில் கலந்து கொண்டு வழங்க வேண்டிய தேவையில்லை. அப்படி ஒருவர் வழங்கும் அன்பளிப்புப் பொருளைக் கடனாக நினைத்துத் திருப்பிக் கொடுக்கின்றபோது, அது அன்பளிப்புப் பொருள் அல்ல.

வைபவங்களில் மட்டும் தான் அன்பளிப்புப் பொருள் வழங்க வேண்டும் என்றில்லை. கூடுதலாக ஏதாவது ஒரு பொருள் கைக்குக் கிடைக்குமாயின் அல்லது எங்கள் ஊரில் மலிவாகக் கிடைக்கும் பொருட்கள் பிற ஊரில் இந்தப் பொருளுக்குத் தட்டுப்பாடு காணப்படும் போது, அந்தப் பொருளைப் பிற பகுதியில் உள்ள உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குப் போகும் போது கொண்டு சென்று கொடுக்கலாம். அப்போது தான் எங்களுக்கிடையிலான அன்பு நீடிக்கும்.இப்படியாக அன்பளிப்புப் பொருட்கள் வைபவங்களிலும் சரி, வைபவங்கள் இல்லாத போதிலும் சரி எங்களை மற்றவர்கள் மறக்காமல் இருப்பதற்கும், அடிக்கடி ஞாபகம் ஊட்டக் கூடியதும் இந்த அன்பளிப்புப் பொருட்கள் கொடுப்பதால் மட்டும் தான் முடியும். அன்பளிப்பாக வாங்கிய பொருளை கவனமாகப் பாதுகாப்பாகக் கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்துப் பேணிப் பாதுகாப்பது பொருட்களைப் பாதுகாக்கவல்ல, உங்கள் உறவைப் பலப்படுத்தவாகும்.

# ஒரு நிமிடம் சிந்தியுங்கள்!

(சென்றவாரத் தொடர்ச்சி...)

வாழ்வில் எவ்வளவோ பிரச்சினைகள் இருந்தும், அதை வெளியில் காட்டாமல் பல குடும்பங்கள் சந்தோஷமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்கிறார்கள். முதலில் புரிந்து கொள்ளவேண்டும் - ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு, எந்தப் பிரச்சினை என்றாலும் தாங்களாகவே பேசித் தீர்த்துக் கொள்வதன் மூலம், இனிவரும் எந்தவித பிரச்சினைகளும் தானாகவே அடங்கிவிடும்.



அவசரப்பட்டுக்கொண்டு எல்லா வேலைகளையும் செய்து முடித்தும், பூர்த்தி செய்யாததுபோல இருக்கும் நாட்களில் ஒரு வேலையையும் ஒழுங்காகச் செய்துமுடிக்கவில்லை என்பதாகும். அதாவது ஒரு நாளில் எவ்வளவு வேலையைச் செய்துமுடிக்க முடியும் என்பதை, அந்த வேலைகளில் கூடுதலான அனுபவம் இருக்கின்றபோது தானாகத் தெரிந்துவிடும். வீட்டு வேலையாக இருந்தாலும், வெளி வேலையாக இருந்தாலும் முதலில் வெளி வேலைகளைக் கணக்கில் எடுப்பதால், இலகுவாக எல்லா வேலைகளும் முடிந்து விடுகிறது.

சில நாட்களில் முதல் வேலைகள் தாமதப்படலாம். அந்த நேரத்தில் அதற்கு ஈடாகச் செய்யவேண்டிய பிற வேலையைச் செய்து முடிக்கலாம். அல்லது முதல் வேலை தாமதத்துக்கான காரணத்தை அறிந்து கொண்டால், மீண்டும் அந்தத் தவறு ஏற்படாமல் தடுக்கலாம். வாழ்க்கையின் - மாற்றங்கள், நேரங்கள், நாட்கள் கணிக்கப்படுகிறது. இந்த நேரமும், நாட்களும் வீணாகக் கழியுமாயின், கண்டிப்பாக வாழ்வில் ஏதோவொரு வழியில் பிரச்சினைகளைக் கொண்டுவரும்.

☆☆☆☆☆☆☆☆☆

# பிஞ்சு முகத்தின் தேடல்

கோவில் மணியோசை காதில் கேட்டது. நான் வாரிச் சுருட்டிக் கொண்டு எழும்பினேன். என் பாயை இப்போது சுற்றிவைக்க முடியாது. என்னுடைய மூன்று உடன் பிறப்புக்களும் என் பாயில் நிரையாக குறுக்குவாட்டில் படுத்திருந்தார்கள். அம்மாவின் கிழிந்த புடவையை எடுத்து அவர்களுக்குப் போர்த்திவிட்டேன். எங்கள் குடிசையை ஒரு நோட்டம் விட்டேன். அப்பா ஒரு மூலையில் சுருண்டு படுத்திருந்தார். இன்னொரு மூலையில் ஒரு அடுப்பு, அதன் மேல் ஒரு பானை அதற்கு அடுத்த மூலையில் ஒரு தகரப்பெட்டி. அதுக்கை தான் எங்கடை வைப்புச் செப்புகள் எல்லாம். குடிசைக்கு விளக்குத் தேவையில்லை. முன்னாலிருந்த தெரு விளக்கு எங்கள் குடிசைக்கு இலவச மின்சாரம் தந்து கொண்டிருந்தது. எனக்குக் கோயில் மணியோடு எழும்பிப் பழக்கம்.

குடிசைக்கு வெளியே வந்து வானத்தைப் பார்த்தேன். நிறைய விண் மீன்கள் நேற்றுப் பாடசாலையில் ஆசிரியை சொன்னது சடடென்டு நினைவுக்கு வந்தது. 'தாரகை நடுவண் தண்மதி' அவ எங்கள் பாடப் புத்தகத்தில் இருந்த பாடலை விளக்கும் போது. இந்தப் பகுதி என் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. நான் வகுப்பில் தாரகை நடுவே தண்மதி போல இருக்கிறேனாம். எனக்குக் கொஞ்சம் பெருமையாகவும் இருந்தது.

என்னுடைய நிறம் நல்ல வெள்ளை. வகுப்பிலை உள்ள மற்றவை எல்லாம் கறுப்பு நிறம். ஆசிரியை அதனால் எப்போதும் என்னை உதாரணம் காட்டி விளக்கம் சொல்லுவா. நான் வடிவு என்பதால் எல்லாருக்கும் என்னிலை கொஞ்சம் பொறாமை. ஆனால், நான் பரம ஏழை. பல நாட்கள் பச்சைத் தண்ணீரைக் குடிச்சிட்டுப் பாடசாலைக்குப் போயிருக்கிறேன். அப்பா பின்னேரம் வேலை முடிய வாங்கி வரும் அரிசியில் சோறு காய்ச்சி, அதனுடன் சிலவேளை பருப்பு சிலவேளை இலைக்கறி, சிலவேளை சம்பல் என்று எங்கடை சாப்பாடு நடக்கும். நாள் முழுவதும் சாப்பிடாமல் இரவு மட்டும் சாப்பிடும் போது எல்லாமே அமிர்தமாக இருக்கும். மத்தியானம் தம்பிமார் மூவரும் எங்கையாவது கோவிலுக்குப் போவார்கள். அங்கே ஐயருக்கு உதவி செய்வார்கள். கோயில் கூட்டுவார்கள். பூப்பறித்து வைப்பார்கள். விளக்குகளை மினுக்கிவைப்பார்கள். பூசை முடிய ஐயர் மூவருக்கும் தளிசை கொடுப்பார். அதைச் சாப்பிட்டு விட்டு கோயில் மண்டபத்தில் குட்டித் தூக்கம் போடுவார்கள். பிறகு மாலைப் பூசைக்குத் தேவையானதைச் செய்து கொடுத்துவிட்டு குடிசைக்குத்திரும்புவார்கள். அவர்களுக்குச் சிறு தொண்டர் கள் என்று ஊர் மக்கள் பேர்வைச்சிருக்கினம்.



எங்கடை பேரைக் கேட் டால் எல்லாரும் சிரிப்பினம். எனக்கு வெண்ணிலா எண்டு பெயர். தம்பிமாருக்கு இளம் சென்னி, இளம் பிறை, இளமாறன் எண்டுபெயர். அப்பா எங்கட பெயர்களைச் சுருக்கி – நிலா, சென்னி, பிறை, மாறன் எண்டுதான் கூப்பிடுவார். அப்பாவுக்கு வெள்ளையன், அம்மாவுக்கு சுமதி எண்டும் பெயர். அம்மா செத்துப் போய் 6 வருசமாச்சு. சின்னத் தம்பிக்கு அப்ப 3 மாதம். எனக்கு 7 வயது. நான் பாடசாலைக்குப் போகத் தொடங்கியிருந்தேன். அப்பா – அம்மா செத்தபோது விசரன் போல நிண்டார். இப்ப திருந்திவிட்டார். 6 வருடம் அவர் எங்களை வளர்க்கப்படும் பாடு...

நான் படிக்க வேணும் எண்டு அப்பாவுக்கு ஒரே ஆசை. இரவிலே சாப்பாடு சமைக்கும் போது அடிக்கடி சொல்லுவார். 'நிலா நீ படிச்சு முன்னுக்கு வந்தால் தான் தம்பிமாரை முன்னேற்றலாம்' அதை நான் நல்லா மனதிலை பதிச்சுக் கொண்டன். நான் நல்லாப் படிக்கவேணும். தம்பிமார் நெடுகச் சிறுத் தொண்டராக இருக்க முடியாது. அவங்களையும் படிக்க வைக்கவேணும்...

வானத்தை அண்ணாந்து பார்த்தேன். நிலவு என்னைப் பார்த்தது. நான் குடத்து நீரைச் சரித்து, வாயைக் கொப்பளித்தேன். உமிக்கரியை எடுத்து பல்லைத் தீட்டினேன். விரைவாக முகத்தைக் கழுவிக் கொண்டு குடிசையில் நுழைந்தேன். சென்னி பாயைச் சுற்றிக் கொண்டிருந்தான். அக்கா! அவன் கூப்பிட்டான். நான் கிட்டப் போனேன்... அக்கா கோயில் ஐயா இண்டைக்கு வெள்ளென வரச் சொன்னவர்... நான் ஏன் எண்டு கேட்பது போலப் பார்த்தேன். அவன் தொடர்ந்தான். எங்களைப் போல வசதியில்லாத பிள்ளைகளைப் பராமரிக்க ஒரு இல்லம் இன்றைக்குத் தொடங்கப் போகினமாம், எங்கள் மூண்டு பேரையும் அதிலை சேர்த்துவிடப் போறாராம். அப்பாவோடை எல்லாம் கதைச்சுப் போட்டாராம்... எனக்கு இப்போது தான் விளங்கியது. அப்பாவுக்குத் தம்பிமாரை விட்டுப் பிரிய மனம் இல்லை. அது தான் மனதுக்குள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார். நான் தம்பியட்டைச் சொன்னேன், உங்களுக்கு விருப்பமெண்டால் போங்கோவன்.

தம்பி சொன்னான்! அக்கா அந்த இல்லத்திலை உணவு, உடை, படிப்பு எல்லாம் கிடைக்கும்! நாங்கள்அங்கை போய் இருந்தால் அப்பாவின்ரை கஷ்டம் குறையும். நீயும் மூன்று நேரமும் சாப்பிடலாம்... அவன் குரல் கரகரத்தது. எனக்கு அவன் மனம் தெளிவாய்த் தெரிந்தது. இவ்வளவு நாளும் இவனைச் சின்னப் பொடியன் எண்டு நினைச்சுக் கொண்டிருந்தன். இவன் பள்ளிக்கூடம் போகாமலே நிறையப் படிச்சிட்டான். கோவில் தொண்டு அவனுடைய மனதைப் பன்படுத்தியுள்ளது. இவன் பாலன் அல்ல...

அவன் மற்றத் தம்பிகளையும் கூட்டிக் கொண்டு கோவிலுக்குப் போகும்போது, ஒரு பெரிய மனிசனாக நடந்து போனான். அப்பா என்னோடு சந்தோசமாக இருக்கப் புழகி விட்டார். இன்றைக்குத் தம்பியவை இருக்கும் இல்லத்துக்கு நானும் அப்பாவும் போகப் போறம். நான் நீளப் பாவாடை போட்டு தலையைப் பின்னி விட்டேன். அப்பாவும் வெள்ளை வேட்டி கட்டி, நெற்றி நிறைய விபூதி பூசி வெள்ளையனாக வெளிக்கிட்டு வந்தார்.

நாங்கள் இல்லத்து மண்டபத்துள் நுழையும் போது, கணீரென்ற குரலில் தேவாரம் கேட்டது. நான் அந்தக் குரலில் மயங்கி நின்றேன். என் பார்வை மண்டப மேடையை நோக்கித் தாவியது. அங்கே என்னுடைய தம்பிமார் மூவரும் பாடிக் கொண்டிருந்தார்கள். 'யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்றபோது .... என் மனம் திருவையாற்று வீதியிலே நடந்து கொண்டிருந்தது. கண்டேன் அவர் திருப் பாதம்... கண்டறியாதன கண்டேன்' ... பாடல் முடியும் போது என் உள்ளத்தில் ஒரு நிறைவு ஏற்பட்டதை உணர்ந்தேன். அருகில் நின்ற அப்பாவைப் பார்த்தேன் கண்களில் நீர்வடிய கை கூப்பி நின்றார்.

மேடையை விட்டு சென்னியும், பிறையும், மாற னும் எங்களை நோக்கித் தாவி வந்தார்கள். அவர்களின் பண்பாட்டுக் கோலம் என்னைப் பரவசப்படுத்தியது. இந்த மூவரும் தொண்டுப் பணி செய்யவே பிறந்தவர்கள். மூன்று பேரும் சூரியர்கள் போல வந்து நின்று வணக்கம் அப்பா! என்று சொன்னபோது அவர்களுடைய இல்லத்து வாழ்வின் பண்பு தெரிந்தது. அப்பா அவர்கள் கைகளைப் பற்றி கண்ணில் ஒற்றிக் கொண்டார். பிறகு மடியை அவிழ்த்தார். சுற்றிய கடதாசி மடிப்பைக் குலைத்து, அதனுள் இருந்த உருத்திராக்க மாலைகளை ஒவ்வொன்றாக அவர்கள் கழுத்தில் அணிந்தார். மூவரும் தெய்வப் பிறவிகளாக முகம் மலர நின்றார்கள். நான் அவர்களைப் பார்த்துப் பரவசமாக நின்றேன். மேடையில் ஒருவர் பேசிய குரல் காதில் விழுந்தது. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே...' என் மனம் அதை நேரே காண அப்பாவுடன் இருக்கையில் சென்று அமர்ந்தேன். ☆

மனோன்மணி சண்முகதாஸ்

# பிறந்த குழந்தையும் நோய்களும்



பிரசவம் ஒரு பெண்ணின் மறுபிறவியாகக் கருதப்பட்டிருந்த காலம் கடந்து விட்டது. இன்றைய மருத்துவ அறிவு பேறுகாலத் தொல்லைகளையும் ஏன் பிரசவ வலியும்கூட கணிசமானளவு குறைந்துவிட்டது.

ஆனால், கர்ப்பகாலத்தில் படித்த பெண்களுக்கும்கூடப் பலவிதமான சந்தேகங்கள் வருவதுண்டு. வீட்டு வேலைகள் செய்யலாமா? படுக்கையில் படுத்து ஓய்வெடுக்க வேண்டுமா? நிறையச் சாப்பிட்டால்தான் குழந்தை நன்றாக வளருமா? அதிகம் சாப்பிட்டால் குழந்தை குண்டாகி பிரசவம் கஷ்டமாகி விடுமா? என இப்படிப் பல சந்தேகங்கள் அவர்களின் மனதில் எழுவதுண்டு.



இந்தச் சந்தேகங்களைப் பாட்டி, தாய்மார்கள், அக்கம் பக்கத்தில் உள்ளோரிடம் கேட்டு அறிந்து கொள்கிறார்கள்.

ஆனால், பிறப்பில் குழந்தைக்கு ஏற்படும் நோய்கள் சில மாற்றங்கள் இவர்களுக்குத் தெரியாமல் உள்ளதால், சில மருத்துவத் தகவல்களைத் தரவிரும்புகிறோம்.


*"அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது*
*கூன் குருடு செவிடு பேடு நீங்கி*
*பிறப்பது அதனினும் அரிது"*

என்ற ஔவை, மூதாட்டியின் வாக்குப்படி எந்தக் குறையும் இல்லாமல் மனித உயிர்கள் பிறப்பது அற்புதமான விடயம் தான். ஆனால், இயல்பாகவே பிறந்த குழந்தைகளுக்குப் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகிறது. இவற்றில் சில குறைகள் தானாகவே மறைந்து விடும்.

சிலவற்றை நாங்கள்தான் கவனமாக இருந்து கண்டு பிடிக்கவேண்டும். கண்பார்வை குறைபாடு, காது கேட்கும் திறன் போன்ற விடயங்களை உன்னிப்பாக ஆரம்பத்திலிருந்தே கண்டு பிடித்து விட்டால், சிகிச்சை மூலம் குணப்படுவது எளிது. இல்லாவிட்டால் அவர்கள் வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட வேண்டியதுதான். ஆகவே சில குழந்தைகள் பிறப்பிலேயே குறைகளுடன் பிறந்தாலும், அதைப் பெற்றோர்கள் கவனிக்கத் தவறும் பட்சத்தில் அவர்களை அறியாமலேயே குழந்தைகளின் எதிர்காலப் பிரச்சினைகளுக்குக் காரணமாகிவிடும். இது ஒருபுறம் என்றால், மறுபுறமாகப் பிரச்சினை என்னவெனில் தாயின் வயிற்றுக்குள் இருந்து வெளிவரும் போதே குழந்தைகள் சில குழப்பமான அறிகுறிகளுடன்தான் பிறக்கிறார்கள்.

இவற்றில் சில எந்தவிதமான சிகிச்சையும் இல்லாமல் தானாகவே மறைந்து விடுகிறது. ஆனால், இந்த விபரம் தெரியாமல் பெற்றோர்கள் கலங்கித் தவிப்பது இயல்பு.

பிறந்த குழந்தைக்கு இயல்பாகக் காணப்படும் பிரச்சினைகள் என்ன? அவை தானாக மறைந்து விடுமா? அல்லது மருத்துவர் சிகிச்சை அளித்தால் தான் குணமாகுமா? என்பது பற்றித் தாயாகப்போகும் ஒவ்வொரு பெண்ணும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த விடயத்தில் ஏற்கனவே அனுபவம் பெற்றவர்களின் கருத்துக்களைக் கேட்டு, அறிந்து கொள்வது மிகவும் கைகொடுக்கும். குழந்தைகள் பிறந்தது முதல் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும், அது தொடர்பான விபரங்களையும் தெரிந்து கொள்வோம்.



சாதாரணமாகப் பிறக்கும் குழந்தைக்குச் சராசரி கர்ப்பகாலம் 40 வாரங்களாகும். இந்தக் காலத்துக்குப் பிறகு பிறக்கும் குழந்தைகளின் சராசரி நிறை 2.8 கிலோகிராமாக இருக்க வேண் டும். 2.5 கிலோகிராமுக்குக் குறைவான நிறையுடன் பிறக்கும் குழந் தைகள் குறைந்த நிறையுள்ள குழந்தை, என்று சொல்கிறோம். இத்தகைய குழந்தைகளுக்குச் சிறப்புப் பராமரிப்புத்தேவை.

### சாதாரணமாகப் பிறக்கும் குழந் தைகளின் பொதுவான இயல்புகள்

நிறை – 2.5 கிலோகிராம் முதல் 3.5 கிலோகிராம் வரை.
நீளம் – 50 சென்ரி மீற்றர்.
தலைச்சுற்றளவு – 35 சென்ரி மீற்றர்
இதயத் துடிப்பு – 120 முதல் 140 வரை (1 நிமிடத்துக்கு)
சுவாசம் – 30 முதல் 40 வரை (1 நிமிடத்துக்கு)

குழந்தை பிறந்தவுடன் சாதாரணமாக தலை மற்றும் கால் கைகளின் நுனிப்பகுதி நீல நிறமாகக் காணப்படும். சில மணி நேரத்தில் குழந்தை இளஞ் சிவப்பு நிறத்துக்கு வந்துவிடும்.

சில குழந்தைகள் பிறக்கும் போதே சிறுநீர் கழிக்கலாம். அல்லது பிறந்த பிறகு சிறுநீர் கழிக்கலாம். குழந்தை பிறந்ததும் முதல் முதலாகக் கழிக்கும் மலத்துக்கு மெகோனியம் என்று பெயர். இது கறுப்பு நிறத்தில் காணப்படும். முதல் நாள் கறுப்பு நிறத்திலும், இரண்டாம் மூன்றாம் நாட்களில் பழுப்பு நிறத்திலும் காணப்படும்.

குழந்தைகள் பிறந்து 3 அல்லது 4 மணித்தியாலத்தில் தாய்ப்பால் குடிப்பதற்குத் தயாராகிவிடும். ஆகையால் தாயைப் பக்கத்திலேயே படுக்கவைக்க வேண்டும்.

குழந்தை பிறந்ததும், முதல் முதல் சுரக்கும் பாலை கட்டாயம் குழந்தைக்குக் கொடுக்கவேண்டும்.

(அடுத்தவாரம் தொடரும்...)

# எமது மக்கள் உரிமையுடன் வாழ்வதற்கு தமிழீழ நீதித்துறையின் சிறப்பே காரணம்

## தமிழீழ நீதிநிர்வாக பொறுப்பாளர் பரா



(கிளிநொச்சி)

எமது மக்கள் சுதந்திரமாக, அடிப்படை மனித உரிமைகளுடன் வாழகிறார்கள் என்றால், அது எமது நீதி நிர்வாக, காவல்துறையின் சிறப்பாகும் என தமிழீழ நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் தமிழீழ சட்டக் கல்லூரி யைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

இன்று தமிழீழ நீதி நிர்வாகத் துறை - பதினொரு வருடங்களைக் கடந்து, தனது சேவையை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

தற்போது இலங்கை நீதிமன்றங்களின் உள்ளே கொலைகளும், களவுகளும் நடப்பது சாதாரண விடயமாகக் காணப்படுகிறது.

நீதியைக் கேட்டு நீதிமன்றம் செல்லும் மக்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். ஆனால், எமது பிரதேசத்தில் எந்த நேரத்திலும், எவருக்கு அடிப்படை மனித சுதந்திரம் கிடைக்கிறது.

எமது தேசியத் தலைவரின் முக்கியமான குறிக்கோள்களில் சட்டக்கல்லூரி அமைப்பது ஒன்றாகும். அதற்கமைய 1991 ஆம் ஆண்டு தமிழீழத்துக்கான சட்டக் கல்லூரி ஒன்று யாழ். மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போர்ச் சூழல்கள், பல நெருக்கடிகள் மத்தியிலும் தொடர்ச்சியாக சட்டக் கல்லூரி இயங்கி வருகிறது.

இதற்கமைய, தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள சட்டக் கல்லூரியில் ஆறாவது அணி கல்வி கற்கப் போகிறது.

இந்தச் சட்டக் கல்லூரியில் 140 மாணவர்கள் கல்வி கற்று எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை கொண்ட மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில் சட்டவாளர்களாக கடமையாற்றுகின்றனர்.

இந்தச் சட்டக் கல்லூரியை சர்வதேச தரத்துக்கு உயர்த்துவதற்கு பல முயற்சிகளை எடுத்துள்ளோம். இதன் ஒரு அங்கமான சர்வதேச சட்ட வல்லுநர்கள் இங்கு வந்துள்ளனர்.

இவர்கள் எமது சட்டக் கல்லூரி மாணவர்களுடன் கலந்துரையாடுகின்றனர். இதைவிட தற்போது உள்ள தமிழ் சட்டவாளர்களும், எமது மாணவர்களுக்கு கற்பிக்கிறார்கள். இந்த விடயம் சிறந்த ஒன்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### சூரிய மின்கலங்கள் வழங்கப்பட்டன

(மன்னார்)

மன்னார் மாவட்ட கல்விக் கழகத்தின் ஏற்பாட்டில், பொருண்மிய மதியுரையகத்தின் நிதியுதவியுடன் நான்கு பாடசாலைகளுக்கு சூரிய மின்கலங்கள் வழங்கப்பட்டன.

இந்தச் சூரிய மின்கலங்கள் - அடம்பன் மத்திய மகா வித்தியாலயம், கண்டற்குளம் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், பெரியமடு மத்திய மகா வித்தியாலயம், மூன்றாம்பிட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கே வழங்கப்பட்டன.




## கடற்தொழிலாளர்கள் சமாசத்தில் இயக்குநர் சபை உறுப்பினர் தெரிவு

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச -வருடாந்தப் பொதுக் கூட்டம் சமாசப் பணிமனையில் தலைவர் ந.குகானந்தம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சமாச இயக்குனர் சபை உறுப்பினர்களாக பின்வருவோர் செய்யப்பட்டனர்.

தலைவராக மு.தங்கவேலு, உப தலைவராக செ.அ.செபநாயகம், செயலாளராக கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ், பொருளாளராக க.நடராசா, இயக்குனர் சபை உறுப்பினர்களாக செ.வெற்றிவேலு, யா.சிமியாம்பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கடற்தொழில், கூட்டுறவுத் துறை அதிகாரிகள், கடற்புலிகள் வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் தீபன், மக்கள் தொடர்பாளர் மறவன் மாஸ்ரர் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இந்த நிகழ்வுக்கு சமாசச் செயலாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ் நன்றியுரை கூறினார். (21)

### ஒலி பெருக்கி அன்பளிப்பு

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்ல பாவனைக்காக, வடமராட்சி கிழக்கு பாடசாலைகளின் சமகத்தினர் 70 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிச் சாதனத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (21)

## தருமபுரம் - உழவனூர் கிராமத்தில் பயனாளிகளுக்கு மரங்கள் வழங்கல்

தருமபுரம் - உழவுனூர் கிராமத்தில் 95 பயனாளிகளுக்கு பயன் தரு மரங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு - கடந்த திங்கட் கிழமை மாலை 4 மணியளவில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கண்டாவளைப் பிரதேச இணைப்பாளர் காசிநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஒரு பயனாளிக்கு 500 ரூபா பெறுமதியான தென்னங்கன்று, தேசிமரம், விதை தானியம் என்பன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வானது, உலக தரிசனத்தின் நிதியுதவியுடன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்றது.

இதில் உலக தரிசன இணைப்பாளர் வி.பிறேம்குமார், கமக்கார அமைப்பு, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகளெனப் பலரும் கலந்துகொண்டனர். (ஸ்ரீ)

## குடாரப்பு - சுண்டிக்குளம் வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது

(குடாரப்பு)

கடந்த நான்கு நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக, குடாரப்பு - தொடக்கம் சுணடிக்குளம் வரையான கடற்கரை வீதி முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் வாகனப் போக்குவரத்து செய்யமுடியாத நிலையில், மழை வெள்ளத்தினூடக மக்கள் கால் நடையாகவே போக்குவரத்துச் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடற்கரையோரத்தில் தாழ்வான பகுதிகளில் மழைநீருடன் கடல் நீரும் சேர்ந்தமையால், கடற்கரையோரத்திலுள்ள வீடுகள், குடிசைகள் நீரினுள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## ஜெயபுரம் ஐந்துகண் மதகு புனரமைப்பு தாமதமாவதால் மக்கள் பெரும் சிரமம்

ஜெயபுரம் வீதியில் ஐந்து கண்மதகு என்றழைக்கப்படும் பெரிய பாலம் புனரமைப்புக்காக கடந்த ஏப்ரல் மாதம் பிரித்தெடுக்கப்பட்டது.

இதற்குப் பதிலாக தற்காலிக வீதியொன்று அமைக்கப்பட்டிருந்து.

இந்த நிலையில் தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக, போடப்பட்ட தற்காலிக வீதியையும் மீறி நீர் பாய்ந்து கொண்டிருக்கிறது.

இதனால் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது. இதனால் பஸ்ஸில் பயணிக்கும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மேலும் சைக்கிளில் பயணம் செய்யும் பயணிகள் - பணம்கொடுத்து சைக்கிள்களை மறுகரைக்குக் காவி கொண்டு செலகின்றனர்.

ஆகவே இந்தப் பகுதி மக்களின் பயணத்தைச் சீர் செய்வதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கு மாறு பொதுமக்கள் கோருகின்றனர். (ஸ்ரீ)

### புனரமைக்கப்படாத வலயக் கல்விப் பணிமனை

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த வலயக் கல்விப் பணிமனைக் கட்டடத்துக்குள் மழை நீர் புகுந்துள்ளமையால் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தப் பணிமனையின் சில பிரிவுகள் - புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு மாற்றப்பட்டுளளதாக, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தெரிவித்தார்.

## வீதிப் போக்குவரத்து தொடர்பான கருத்தூட்டல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களுக்கும், ஆசியர்களுக்குமான வீதிப் போக்குவரத்து தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கருத்தூட்டலில், வாகனப்போக்குவரத்துப் பிரிவு பொறுப்பாளர் சி.சிவகுமாரன், துணைப் பொறுப்பாளர் ஜீவானந்தன் ஆகியோர் வீதி ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பான கருக்துக்களை நிகழ்க்கினர்.

இந்த நிகழ்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களும், 25 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

இந்தக் கருத்தூட்டல் நிகழ்வில் பாதசாரிகள், சாரதிகள், சைக்கிள் ஓட்டுநர்கள் - வீதியைப் பாவிக்கும் முறை பற்றியும், விபத்தைத் தவிர்ப்பது எவ்வாறு என்பது பற்றிய விடயங்கள் தொடர்பாக ஒவ்வொரு நாளும் மாணவர்களுக்கு அறிவுறுத்தும் படியும் கூறப்பட்டது.

### வலுவிழந்தோருக்கு உதவி

மன்னார்-பெரியமடு கிராமத்தில் கடந்த கால போரால் வலுவிழந்தோருக்கான உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கி வருகிறது.

இந்த மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற போர் நடவடிக்கையால் 1200 மக்கள் வலுகுறைந்தவர்களாக உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### பெண்கள் அபிவிருத்தி தொடர்பாக ஆய்வு

மன்னார் -மாந்தை மேற்குப் பிரதேசத்தில் பெண்கள் அபிவிருத்தி தொடர்பான ஆய்வு இடம்பெற்று வருகிறது.

இந்தப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், ஐக்கிய நாணய அபிவிருத்தி திட்டத்துடன் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளது.

### ஆண்டான்குளம் - நாயாற்று வீதியை புனரமைப்பு செய்ய மக்கள் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் - ஆண்டான் குளத்துக்கும் நாயாற்றுக்கும் இடையிலான வீதி, தற்போது பெய்துவரும் கடும் மழையால், அரிப்புக்குள்ளாகிப் படுமோசமான நிலையில் சிதைவடைந்துள்ளது.

இதனால், இந்தப் பாதையூடாகப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் இந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களையும், ஆபத்துக்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### குளங்களின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, துணுக்காய், வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழான குளங்களின் நீர் மட்டம் அண்மைக் காலங்களில் உயாவடைந்துள்ளது.

இதன்படி வவுனிக்குளம் 21 அடி 7 அங்குலமும், மருதங்குளம் 8 அடி 6 அங்குலமும், முறிகண்டிக் குளம் 9 அடியும், தேராங்கண்டல்குளம் 9 அடியும், கல்விளான் குளம் 10 அடியும், ஐயங்கன் குளம் 10 அடி 4 அங்குலமும், அம்பலப் பெருமாள் குளம் 8 அடி 2 அங்குலமும், கோட்டைகட்டிய குளம் 8 அடியும், தென்னியன் குளம் 9 அடி 7 அங்குலமும், மல்லாவிக்குளம் 8 அடியும், பனங்காமம் குளம் 8 அடியுமாக நீர் மட்டங்கள் உயர்ந்துள்ளன.

இந்தக் குளங்களில் மருதங்குளம், முறிகண்டிக் குளம், தேராங்கண்டல் குளம், கல்வியான் குளம், கோட்டைகட்டிய குளம், பனங்காமம் குளம் ஆகியன வான் பாயத் தொடங்கியுள்ளன. ( )

## மன்னார் மாவட்ட பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரத்தில் வெளிமாவட்ட மாணவர்களை சேர்த்துக்கொள்வதை எதிர்த்து மாணவர் பேரணி

மன்னார் மாவட்டப் பாடசாலைகளில, வெளிமாவட்ட மாணவர்களை கல்வி பொதுத்தராதர உயர்தர வகுபபுக்களில் இணைத்துக் கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, மாணவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி குறைந்த மாவட்டங்களில் ஒன்றான மன்னார் மாவட்டத்தில், வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் - இந்த மாவட்ட பாடசாலைகளில் இணைந்து கல்வி கற்று, பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர்.

இதனால், மன்னார் மாவட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறும் வாய்ப்புக்களை இழக்கும் நிலை ஏற்பட்டு வருவதையடுத்தே, தாம் வெளிமாவட்ட மாணவர்களை இணைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக, மன்னார் மாவட்ட உயர்தர வகுப்பு மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலை புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி மாதா கோயிலில் ஆரம்பித்த எதிர்ப்புப் பேரணி - மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது.

வெளிமாவட்டத்ததைச் சேர்ந்த மாணவர்களை இணைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மாணவரை இணைக்கும் நடவடிக்கையை நிறுத்துமாறும் கோரும் மகஜரை ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும், பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கான மகஜரை மேலதிக அரசாங்க அதிபர் என்.நீக்கிலஸ் பார்வையிட கையளித்தனர்.

இந்த எதிர்ப்புப் பேரணியில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களும், மதத்தலைவர்களும் மற்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் விநோனோகராதலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (201)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா பிற்பகல் தாமே வரும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பலமான எதிர்பார்ப்புக்களும் பலவீனமான நம்பிக்கைகளும்...

தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வைப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆராயவும், அத்தகைய செயற்பாடுகளுக்குத் தடையாக உள்ள அம்சங்களை அறிந்து அவற்றை நீக்கும் வழிவகைகளைத் தேடவும் சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வே அரசின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு வந்துள்ள நிலையில், சமாதான நகர்வுகளின் எதிர்காலம் குறித்து இந்த முறை தீர்க்கமான சில முடிவுகள் வெளியாகக் கூடும் என்ற எதிர்பார்ப்பே பலரிடமும் மேலோங்கி இருக்கக் காணப்படுகிறது.

கடந்த - கலைக்கப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் பெரும் நம்பிக்கையுடனும், நிறைந்த எதிர்பார்ப்புக்களுடனும் சர்வதேச சமூகத்தின் பரந்துபட்ட ஆதரவுப் பின்னணியுடன் ஆரம்பக் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்கள், ஆரம்பத்தில் மிகவும் சுமுகமாகவும், புரிந்துணர்வுடனும் பரஸ்பர நம்பக்கைகளை கட்டி எழுப்பும் வகையில் கட்டம் கட்டமாக முன்னேறிய போதிலும் வொஷிங்ரன் மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்வதற்கு அழைக்கப்படாததையடுத்து - நம்பிக்கையீன விரிசல் ஏற்பட ஆரம்பித்தது, இடைக்கால நிர்வாகம் தொடர்பான விட யத்தில் அரசின் உறுதியற்ற நிலையும், தென்பகுதிப் பேரின வாதிகளின் குறிப்பாக ஜனாதியினதும் அவரின் தோழமைக் கட்சிகளினதும் சமாதான எதிர்ப்பு நடவடிக்கைகளும் அதிகாரப் பலமற்ற - சுயமாகத் தீர்மானம் எடுக்கும் உரிமையற்ற பிரதமர் ரணிலின் கையறு நிலையும் சமாதானப் பேச்சுக்களை மேலும் முன்னெடுக்கும் வாய்ப்பைத் தடுத்தன.

ஆனாலும் கூட - புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாடுகளை விடுதலைப் புலிகள் - சர்வதேச சமூகம் மற்றும் நோர்வே நாட்டின் அனுசரணை ஆகியவற்றின் மீதான நம்பிக்கை காரணமாக தொடர்ந்தும் நேர்மையான முறையில் கடைப்பிடிக்கத் துணிந்ததையடுத்து சமாதானத்துக்கான எதிர்கால வாய்ப்புக்கள் அற்றுப்போகும் நிலை தவிர்க்கப்பபட்டது எனலாம்.

விடுதலைப் புலிகளின் சமாதான முயற்சிகள் குறித்த நிலைப்பாடானது ஆரம்பம் முதல் இன்று வரை ஒரு தெளிவான கொள்கையைக் கொண்டதாக இருந்த போதிலும் இலங்கை அரசும், ஜனாதிபதியும் அதுதொடர்பாக உறுதியான நிலைப்பாடு எதனையும் கொண்டதாக இல்லை என்பதே சமாதான முயற்சிகளின் தேக்க நிலைக்குப் பிரதான காரணம் எனலாம்.

பேரினவாதிகள், பௌத்த மதவாதிகள் போன்றோரின் உள்ளக அழுத்தங்கள் ஒருபுறம், அயலக மற்றும் வல்லாதிக்க சக்திகளின் புற அழுத்தங்கள் மறுபுறம் - இனப்பிரச்சினைக்கு நியாயமானதும், சாத்தியமானதுமான தீர்வொன்றை முன்வைக்கும் நேர்மையற்றதும் கபடத்தனம் கொண்டதுமான சிங்கள ஆட்சித் தலைமைகளின் பாரம்பரிய சுபாவம் நடுப்புறமாக சமாதான முயற்சிகளை தொடர்ந்து தலையெடுக்க விடாது தடுத்து வந்துள்ளன என்பதும் உண்மையே ஆகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி ஆட்சி அமைத்ததுமே சமாதானத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விட்டதும் நிஜமே...

ஆனாலும், சமாதான முன்னெடுப்பை நிறுத்தவோ, மீண்டும் போரை ஆரம்பிக்கவோ சர்வதேச சமூகம் அங்கீகாரம் அளிக்காது என்ற நிலையே - ஜனாதிபதி இன்றும் போரை ஆரம்பிக்காதிருக்கக் காரணம் எனக்கூறும் அரசியல் நோக்கர்கள் சமாதானத்தின் பேராலேயே இலங்கைக்கான நிதியுதவிகள் வழங்கப்படுமென்ற உதவி வழங்கும் நாடுகளின் நிபந்தனையும் அதற்கான மற்றொரு பிரதான காரணம் என்றும் கூறு கின்றனர்.

புதிய அரசின் ஏழுமாதகால ஆட்சி சமாதான முன்னெடுப்புத் தொடர்பாக எந்தவொரு நம்பிக்கையூட்டும் சமிக்ஞையையும் இதுவரை தரவில்லை என்றே கூறவேண்டும்.

அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை இன்னமும் முழுமையாக நிரூபிக்காத அரசு, கூட்டுக் கட்சிகளின் சமாதான எதிர்ப்புக் குரல் பௌத்த மதபீடங்களின் பின்அழுத்தங்கள், அயலக, ஆதிக்க சக்தியின் சுயநல அபிலாஷைகளின் நெருக்குதல், சர்வதேச சமூகத்தின் சமாதானம் தொடர்பான வலியுறுத்தலென பன்முகப்பட்ட சிக்கலுள் ஜனாதிபதியானவர் தனது பதவியைப் பாதுகாப்பதில்மட்டுமே தீவிரமாக இருந்துவரும் நிலையில் அவர் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக நேர்மையான அணுகுமுறை எதனையும் எடுப்பாரென எண்ணத் தோன்றவில்லை.


அவர் தொடர்ந்தும் குயுக்தியான நடவடிக்கைகளைக் கையாண்டு புதிய நிபந்தனைகளை விதித்தோ, ஏற்றுக் கொள்ள முடியாத ஆலோசனைகளை முன்வைத்தோ காலம் கடத்தும் ராஜதந்திரத்தைக் கையாளவே முனைவார் என்பது திண்ணம்.

கொழும்புக்கு வந்து அவரைச் சந்தித்த நோர்வே வெளியுறவு அமைச்சரிடம் அவர் என்ன செய்தியைக் கொடுத்து விட்டுள்ளார் என்பது ஒருபுறம் இருக்க, அந்தச் செய்தி சமாதானம் குறித்த நம்பிக்கையை உறுதி செய்யுமா? என்ற கேள்விக்கு பதில் அதிலிருக்காது என்றே எண்ணத் தோன்றுகிறது.

விடுதலைப் புலிகளுக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை வழங்குவது தொடர்பாக தன்னால் இப்போதைக்கு எதுவும் கூறமுடியாது என ஜனாதிபதி ரொயிட்டர் செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய செய்தியை அடிப்படையாக வைத்துப் பார்த்தால், இலங்கைக்கு வருமுன் ஜான் பீற்றர்சன் தெரிவித்த நம்பிக்கையீன எதிர்வு கூறல் சரியானதாக இருக்குமென்றே நம்பமுடிகிறது.

# நாடும் நடப்பும்

செய்தி:- ஜனாதிபதியின் முலோபாயங்கள் அனைத்தும் சமாதானத்தைத் தொடர அவர் விரும்பவில்லை என்பதையே எடுத்துக் காட்டுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு



# புலிகளுக்கெதிரான இயக்கங்களை இந்தியா வலுப்படுத்த வேண்டுமாம்!

## சென்னையில் டக்ளஸ் கோரிக்கை

(கொழும்பு)

மொழி, இன, பண்பாடு, சமயரீதியில் இரு நாடுகளுக்கும் உறவு இருப்பதால், இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் இந்தியா அக்கறைகாட்ட வேண்டும் என, ஈ.பி.டி.பியின் செயலாளர்நாயகம் டக்ள்ஸ் தேவானந்தா கோரியுள்ளார்.

இந்தியா சென்றுள்ள அவர், டெல்கியில் மன்மோகன் சிங், வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் உள்ளிட்டோரைச் சந்தித்தபின், சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையால் இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா நேரடியாகத் தலையிடாமல் ஒதுங்கி நிற்கிறது. அதேவேளை, இந்தப் பிரச்சினையில் தலையிடுவதற்கு வேறுசில வழிகள் உள்ளன.

அதில் முதலாவது, விடுதலைப் புலிகள் எதிர்த்தாலும் இந்திய - இலங்கை நாடுகளுக்கிடையில் இராணுவ ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்தாகவேண்டும். அடுத்து ராஜீவ் கொலை தொடர்பாகத் தேடப்படும் புலிகளின் தலைவர் பிரபாகரனை ஒப்படைக்கும்படி இலங்கையிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்த வேண்டும்.



புலிகளுக்கு எதிரான தமிழர் இயக்கங்களை வலுப்படுத்த இந்தியா உதவவேண்டும்.

அமைதி முயற்சியில் நோர்வே ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில், அதன் தலைநகர் ஒஸ்லோவில் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்தைக் கைவிடுவதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். இது அந்த இயக்கத்துக்குப் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை இல்லாததையே காட்டுகிறது.

விடுதலைப் புலிகள் கோரியதுபோல இடைக்கால நிர்வாக ஆட்சியமைத்தாலும், கிழக்கு திமோர் போல் புலிகள் அமைப்பினர் பிரச்சினைகளை ஏற்படுத்துவர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறிய கருணா குழுவுடன் எங்கள்கட்சி கூட்டுச் சேர்ந்திருப்பதில் தவறில்லை. அந்தக் குழு ஜனநாயக வழிக்கு வந்திருப்பதை வரவேற்பதால்தான் கூட்டுச் சேர்ந்திருக்கிறோம். பிரபாகரனை எதிர்ப்பதால் அல்ல.

அத்துடன், தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையால் நேரும் கொடுமைகள் தவிர்க்கப்பட வேண்டும். இரு நாடுகளினதும் கடற்படையினர் கூட்டாக ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டால் இத்தகைய தவறுகளைத் தவிர்க்கலாம் எனத் தெரிவித்தார்.

## தினேஷை விடுவிக்குமாறு அஷ்ரப் காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

ஈராக் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழரான தினேஸ தர்மேந்திரா இராஜரத்தினத்தை விடுவிக்குமாறு அஷ்ரப் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வேண்டுகோள் கட்டாரிலுள்ள 'அல் - ஜசீரா' தொலைக்காட்சிக்கு நேற்றுமுன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் ஈராக்குக்கும், இலங்கைக்குமிடையிலான நட்புறவு, ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில்- ஈராக்கிற்குப் படை வீரர்களை அனுப்பிவைக்கமாட்டேன் என இலங்கை ஜனாதிபதி குறிப்பிட்டது போன்றன நினைவுபடுத்தப்பட்டுள்ளது.

புனித ரம்ழானுக்கு முன்னதாக இவரை விடுதலை செய்யுமாறு அஷ்ரப் காங்கிரஸ் தவிசாளர் அல்ஹாஜ் எஸ்.சுபைதீன் இந்த வேண்டுகோள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ். மாவட்ட விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய விரிவாக்கல் திணைக்களத்தால் எதிர்வரும் 13ஆம், 17 ஆம் திகதிகளில் விவசாயிகள் மற்றும் விவசாயத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்குப் பயனளிக்கக் கூடியதான பயிற்சி வகுப்புக்களை நடாத்த இருப்பதாக விவசாய விரிவாக்கல் திணைக்கள யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

13 ஆம் திகதி சனிக்கிழமை பழப்பயிர்ச்செய்கை தொடர்பாகப் பயிர்த் தெரிவு, நடுகை, பராமரிப்பு போன்ற விடயப் பரப்புகளிலும் 17 ஆம் திகதி புதன்கிழமை மிளகாய் நாற்றுமேடைப் பராமரிப்புத் தொடர்பாகவும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

காலை 9 மணி முதல் மாலைவரை நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிகளில் கலந்துகொள்ள விரும்பும் விவசாயிகள் மற்றும் மாணவர்கள் தமது பகுதி விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

(31)

## பொலிஸ் நீதித்துறைகளில் ஊழல் ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு திஸ்ஸ அத்தநாயக்க மறுப்பு!

(கொழும்பு)

பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் நாட்டில் அதிகளவு ஊழல் மோசடிகள் நிறைந்த இரு துறைகளாகப் பொலிஸ் மற்றும் நீதித் துறை காணப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துக் குறித்து ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கண்டனம் தெரிவித்திருக்கின்றார்.

இந்த இரு துறைகளும் ஊழல் நிறைந்தவையாக இருந்தால் அதற்கான பொறுப்பை ஜனாதிபதியே ஏற்றுக்கொள்ள வேண்டும். இதைவிடுத்து ஒருசிலர் மீது குற்றஞ் சாட்டுவதால் பல சிக்கல்கள் ஏற்படும்.

பொலிஸ்துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றின்மீது ஜனாதிபதி மோசடிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது, அவர் தம்மீதே குற்றப் பத்திரிகையை முன்வைப்பதாகவே அமையும்.

பத்துவருடங்களாக ஜனாதிபதியின் கீழ் இருந்த இரு துறைகளில் இடம்பெறும் மோசடிகளைக் கட்டுப்படுத்த அவரால் முடியாது போயுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கல்வியியல்... பா.தனபாலன்


# கிராமியப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி கற்றல் - கற்பித்தல் பிரச்சினைகள் - அபிவிருத்திகள்

**நவீன கல்விப்பிரயோகமாக செயல் நிலை ஆய்வு அடிப்படையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் மாதிரியாக ஆரம்பக்கல்வி கிராமியப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, அங்கு கற்றல் – கற்பித்தல் பிரச்சினைகள், அபிவிருத்திகள் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டு இங்கு தரப்படுகின்றன.**

மனித வாழ்வுக்கும், இருப்பிற்கும் கல்வி அடிப்படையானது. அதிலும் ஆரம்பக் கல்வித் தேர்ச்சிகள் எதிர்கால நாட்டின் அபிவிருத்திக்கே வழிகாட்டுகின்றன. ஆரம்பக் கல்விக் கலைத்திட்டமானது, எதிர்கால வாழ்க்கைத் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது. இங்கு தேர்ச்சி என்பது அறிவு, திறன், மனப்பாங்கு, செயலாற்றுகை, ஆளுமை என்பவற்றின் கூட்டாகும். தொடர்பாடல், சுற்றாடல், ஒழுக்கமும் சமயமும், விளையாட்டும் ஓய்வும், கற்றலுக்காகக் கற்றல் என்பவை அடிப்படைத் தேர்ச்சிகளாகவுள்ளன. இவை தாய் மொழி, கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் ஆகிய பாடங்களினூடாகப் பிரயோகிக்கப்படுகின்றன. இவ்வாறான மிகவும் முக்கியம் வாய்ந்த ஆரம்பக் கல்வி, கிராமியப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும்போது பல பிரச்சினைகள் எழுகின்றன. இவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லை.


## பிரச்சினைகளுக்கான காரணங்கள்

ஆரம்பக்கல்வி மாணவர்களின் கற்றல் செயலாற்றுகைகளை வினைத்திறனுடையதாக மாற்றுவதற்காக, மாணவர்களின் பிரச்சினைகள், ஆசிரியர், பெற்றோர், மாணவர்கள் சார்பாகக் காணப்படுகின்றன. பொதுவாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பாடசாலை வகுப்பறைகளில் அறுபது வீதமான மாணவர்கள் எல்லாப் பாடங்களிலும் ஓரளவு தேர்ச்சியைப் பெறக்கூடிய நிலையிலும், ஏனைய நாற்பது வீதமானவர்கள் தேர்ச்சி மட்டத்துக்குக் கொண்டுவர வேண்டியவர்களாகவும் காணப்பட்டனர். இவர்களில் வரவு வீதத்தை (2003 ஆம் ஆண்டு) மாதிரியாகப் பத்து மாணவர்களினூடாக மேற்கொண்ட போது பின்வருமாறு தரவு கிடைத்தது.




பாடசாலை நாட்கள் – 194

இதன்படி பெரும்பாலான மாணவர்களின் பாடசாலை வரவு குறைவாகக் காணப்படுகின்றது. இது அவர்களுடைய கல்வியைப் பாதிக்கின்றது. மேலும் இந்தப் பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுடைய செயலாற்றுகைகளை நோக்குகின்றபோது, வகுப்பறைகளுக்குக் கிரமமாகச் சென்று கற்பிக்கின்றார்கள். ஆனால், செயற்பாட்டு முறையிலான, கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்திக் கற்பிக்கும் ஆசிரியர்கள் குறைந்த வீதத்திலேயே காணப்பட்டனர். கற்றல் - கற்பித்தல் சாதனங்கள் தற்போது தர உள்ளீடுகள் என்ற வகையில், மிகுந்த முக்கியத்துவமுடையவையாகக் காணப்படுகின்றன. இதற்காக அரசாங்கம் பெருமளவு நிதியையும் பாடசாலைகளுக்கு வழங்குகின்றது.




இந்த வரைபின் மூலம் பாடத்தைக் கற்பிக்கும் போது 60% ஆசிரியர் பாடநூலை மட்டும் பயன்படுத்துவதையும் 40% ஆசிரியர் உள்ளீடுகளைப் பயன்படுத்துவதையும் அவதானிக்க முடிந்தது.

மேலும் ஆசிரியர்களுக்குப் புத்துணர்வு வாண்மை விருத்திச் செயலமர்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன், பெரும்பாலான ஆசிரியர்கள் ஆரம்பக் கல்வி ஆசிரிய பயிற்சி பெறாதவர்களாக, தொண்டர் சேவை செய்பவர்களாகக் காணப பட்டனர். இவர்களைப் புதிய ஆரம்பக் கல்வி மகிழ்ச்சிகரமான கற்றல் செயன்முறைக்கு இட்டுச்செல்ல வழிகாட்ட வேண டியுள்ளது. பயிற்சி தேவையானவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டிய பொறுப்பு திணைக்களத்தைச் சார்ந்தே உள்ளது. தொடருறு ஆசிரியர் பயிலரங்குகள் இலங்கையில் ஆசிரிய மத்திய நிலையங்களினூடு மேற கொள்ளப்படுகின்றன. இத்தொடருறு பயில்வின் நோக்கமே குறித்த பிரதேசத்தில் எவ்வகையான பயிற்சி தேவை என இனம் கண்டு, அதை ஆசிரியர்களுக்கு வழங்கு வதாகும். ஆனால் இந்த நிலை எமது பிரதேசத்தில் இன்னும் பூரணமாக மேற்கொள்ளப்படாமலே உள்ளது.




## பெற்றோர் தொடர்பான பிரச்சினைகள்

இன்றைய கல்விச் செயற்பாடுகளில் பெற்றோரின் பங்கு மிகவும் முக்கியமாகக் கருதப்படுகின்றது. இந்த ஆய்வுக்கான பாடசாலைகள் கிராமப் புறங்களில் அமைந்துள்ளதால் கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கிய பெற்றோர்களின் பிள்ளைகளே மெல்லக் கற்கும் மாணவர்களாகவுள்ளனர். பெற்றோரின் தொழில்விபரம் மாதிரிக்கு எடுக்கப்பட்டது.

**பெற்றோரின் தொழில் விபரம்**


| தொழில் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| தோட்டம் | 10 | 38% |
| கூலிவேலை | 7 | 26% |
| கைத்தொழில் | 2 | 8% |
| மேசன் | 3 | 12% |
| வியாபாரம் | 3 | 12% |
| அரசதொழில் | 1 | 4% |




பெற்றோர்களின் வறுமை காரணமாக பெரும்பாலான மாணவர்கள் வகுப்பறைகளில் சோர்வுடன் காணப்படுகின்றனர். காலை உணவு அருந்தாமலே பாடசாலைக்கு வருகின்றனர். பெற்றோர் வேலைக்குச் செல்வதால், சகோதரர்களைப் பராமரித்தல், வீட்டைப் பராமரித்தலில் மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டு, பாடசாலை வரவு குறைகின்றது. மேலும் பெற்றோர்களைப் பாடசாலைக்கு அழைத்தால் வருவதில்லை. அவர்களுடைய கல்வி அறிவு மட்டம் தொடர்பாக மாதிரிக்குத் தகவல்களை எடுத்து ஆய்வு செய்தபோது,

**பெற்றோரின் கல்வியறிவு தொடர்பான விபரம்**

| கல்வித்தரம் | பெற்றோரின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| தரம் 5 | 5 | 19% |
| தரம் 6 | 3 | 12% |
| தரம் 7 | 4 | 15% |
| தரம் 8 | 6 | 23% |
| தரம் 9 | 2 | 8% |
| தரம் 10 | 1 | 4% |
| O/L | 3 | 12% |
| A/L | 2 | 7% |




பெற்றோர்களுக்குக் கல்வி அறிவு மட்டம் குறைவாக இருப்பதால் தமது பிள்ளைகள் கற்கவேண்டும், அதற்கான வசதிகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லாதுள்ளனர். பாடசாலைச் செயலாற்றுகைகளில் பங்கு கொள்ளாமல் உள்ளனர். இதனால் பொதுவாகத் தமிழ், கணித பாடம் உட்பட எல்லாப்பாடங்கள் தொடர்பான அபிவிருத்தியும் பாதிக்கப்படுகின்றது. ஆரம்பக் கல்வி கட்டாய உரிமையாக உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், பல மாணவர்கள், ஆய்வு செய்யப்பட்ட கிராமங்களில் பாடசாலைக்குச் செல்லாமல் உள்ளனர். இது வட-கிழக்கு மாகாணத்தில் பெரும்பிரச்சினையாகவுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை மக்களிடையே ஏற்படுத்த வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது.

தமது தொழில்கள் மூலம் கூடுதல் வருமானத்தைப் பெறும் பெற்றோர்கள் கூட, கல்வியறிவு அற்ற நிலையில் தமது பிள்ளைகளுக்குத் தேவையான கற்றல் சாதனங்களை வழங்குவதில்லை. திறமையாகக் கற்க விரும்பும் மாணவர்கள் கூட வீட்டுச் சூழ்நிலைகளால் வழி தவறுகின்றனர். ஆரம்பக் கல்வியானது பிள்ளையின் ஆளுமையை அபிவிருத்தி செய்து, அந்தப் பிள்ளை வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள ஓர் அடித்தளத்தை இடுகின்றது. விழுமிய, நல்லகுணமுள்ள, எதிர்கால சந்ததியாக வாழ வழிகாட்டுகின்றது. இந்தக் கல்வியை முழுமையாக வழங்காத நாட்டின் எதிர்காலம் இருளாகவே இருக்கும்.

மேலும் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பாடசாலை வகுப்பறைகள், மாணவர்கள் சுதந்திரமாகக் கற்பதற்கு விசாலமானதாகக் காற்றோட்டமுள்ளனவாகக் காணப்படவில்லை. மற்றும் மணல் மூலை, புத்தக மூலை, சுற்றாடல் மூலை, கற்றல் உபகரணங்கள், நீர் வசதிகள், செயற்பாட்டறைப் பிரயோகங்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. பொதுவாக இன்று கிராமிய ஆரம்பக் கல்விப் பாடசாலைகள், வளங்கள் அற்று, வறுமை நிலையில் கற்கும் மாணவர்களைக் கொண்டே இயங்குகின்றன. படிப்படியாக மாணவர் சேரும் தொகைகளும் வீழ்ச்சியடைந்து வருகின்றன. உலக வங்கி இவ்வாறான பாடசாலைகளை மூடிவிட அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. இந்த நிலையில் அங்கு கற்கும் மாணவர் வேறு பாடசாலைக்கும் சென்று கற்காமல் கல்வியையே இடைநிறுத்தும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது எம் எதிர்காலத்தையே பாதிப்படையச் செய்துவிடும். எனவே கிராமப்புற ஆரம்பப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பான விழிப்புணர்வும், விரைவான செயலாற்றுகைகளும் இன்று வேண்டப்படுகின்றன.

## சாதாரணதர மாணவருக்கான மாதிரிப் போட்டித் தேர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தினதும், கிளிநொச்சி வலயக்கல்வி பணிமனையினதும் அனுசரணையுடன் நமது ஈழநாடு பத்திரிகை கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான மாதிரி போட்டித் தேர்வு ஒன்றை நடத்தவுள்ளது.

கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானமும், தொழில்நுட்பமும், அழகியல் பாடங்களுக்கான கருத்தமர்வு இன்று தொடக்கம் நாளை மறுதினம் வரை முழங்காவில் மகாவித்தியாலயம், ஜெயபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, பூநகரி மகாவித்தியாலயம், பளை மத்திய கல்லூரி, தர்மபுரம் முருகானந்தா மகாவித்தியாலயம், வட்டக்கச்சி மகாவித்தியாலயம், அக்கராயன் மகாவித்தியாலயம், கனகாம்பிக்கைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கனகபுரம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, றெட்பானா பாரதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இடம்பெறும்.

இந்த கருத்தமர்வுகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். இன்று கணிதபாடமும், நாளை ஆங்கிலப்பாடமும், நாளை மறுதினம் விஞ்ஞானப்பாடம், தொழில்நுட்பமும் இடம்பெறும். எனவே கல்வி பொதுத்தராதர சாதாரணதர தேர்வில் தோற்றும் மாணவர்களை இதில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# ஈராக்கின் பலூஜா நகரில் கடும்மோதல் தொடர்கிறது



(பாக்தாத்)

ஈராக்கியத் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பலூஜா நகரின் மையப்பகுதியினைக் கைப்பற்றுவதற்காக அமெரிக்கப் படைகள் பாரிய தாக்குதலை ஆரம்பித்துள்ளன.

கடந்த ஐந்து நாட்களாக ஈராக்கியத் தீவிரவாதிகளுக்கும், அமெரிக்க, ஈராக்கிய கூட்டுப் படையினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றுவருகின்றபோதும், அமெரிக்கப் படையினரால் பலூஜா நகரினை தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடியவில்லை. பலூஜா நகரின் புறநகர்ப் பகுதிகளை சுலபமாகக் கைப்பற்றிய அமெரிக்கப் படையினருக்கு எதிராக ஈராக்கியத் தீவிரவாதிகள் பலூஜா நகரின் மையப் பகுதியில் வைத்து கடுமையான எதிர்த்தாக்குதலை நடத்திவருகின்றனர்.

ஈராக்கியத் தீவிரவாதிகள் மோட்டார்கள், றொக்கட்டுக்கள் மூலம் அமெரிக்க இராணுவத்தினர் மீது பலத்த தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர். நேற்று பலூஜா நகரப் பகுதியில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் அமெரிக்கப் படையினரின் மூன்று துருப்புக்காவிகளும், இரண்டு டாங்கிகளும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இத்தாக்குதலில் 6 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும், அவர்களது உடல்கள் அழிக்கப்பட்ட டாங்கிகளுக்கு அருகே சிதறிக்கிடந்ததைத் தனது கண்களால் கண்டதாகவும் பலூஜா நகரில் உள்ள பி.பி.ஸி. செய்தியாளரான பாத்கில் பார்டன் தெரிவித்தார்.

மேலும் பலூஜா நகரின் பல பகுதிகளிலும் பல நூற்றுக்கணக்கான இறந்த உடல்கள் காணப்படுவதாகவும், இவற்றில் கணிசமான உடலகள் அமெரிக்கக் கூட்டுப் படையினரது என்றும், ஏனையவை ஈராக்கியத் தீவிரவாதிகளது என்றும் அவர் தெரிவித்தார். இறந்த உடல்களில் இருந்து பலத்த துர்நாற்றம் வீசுவதாகவும், பலூஜா நகரம் பயங்கரமாகக் காட்சியளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை இடம்பெற்ற மோதல்களில் 11 அமெரிக்கப் படையினரும், ஈராக்கியப் படையினரும் கொலலப்பட்டதாக அமெரிக்க இராணுவம் நேற்றுத் தெரிவித்தது.

ஆனால், இக்கூற்றினை மறுத்துள்ள சர்வதேச செய்தி ஊடகம் ஒன்று, பல அமெரிக்கப் படைவீரர்களது உடல்கள் ஆங்காங்கே காணப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

இதேசமயம் 20 ஈராக்கிய தேசிய காவற்படையினரை தீவிரவாதிகள் கைதுசெய்துள்ளனர். இவர்களைக் கைதுசெய்யும் காட்சியினை அல் ஜசீரா தொலைக்காட்சி நேற்று ஒளிபரப்பியுள்ளது.

பலூஜா நகரின் மையப் பகுதிக்கு அண்மையில் தீவிரவாதிகள் தங்கியிருந்த பாரிய கட்டடத் தொகுதி ஒன்றினை அமெரிக்கப் படையினர் கைப்பற்றியுள்ளனர். ஆனால், தீவிரவாதிகளிடம் இருந்து அமெரிக்கப்படைகள் கைப்பற்றியுள்ள பிரதேசங்களைப் பார்க்கிலும் அதிகமான பகுதி தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டின் கீழே இருப்பதாக பலூஜா நகரத்தில் அமெரிக்கப் படைகளுடன் உள்ள பி.பி.சி. செய்தியாளர் போல் வூட் தெரிவித்தார்.

அத்துடன் பலூஜா நகரப் பகுதியில் உள்ள ஒரு கட்டடத்தில் இருந்து பெருமளவிலான வெடிபொருட்கள் ஈராக்கியத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட வெளிநாட்டவர்கள் கொல்லப்படும்போது பதிவு செய்யப்பட்ட ஒளிநாடாக்கள் ஆகியவற்றைத் தாம் கைப்பற்றியுள்ளதாக அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர்.

# பொலிஸ் அதிகாரியொருவர் நேபாளத்தில் சுட்டுக்கொலை

நேபாளத்தில் பட்வால் நகரத்தில் வைத்து பொலிஸ் அதிகாரியொருவரை மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகள் சுட்டுக்கொன்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர் கெம்ராம் றெஜிமி எனவும், இவர் பொலிஸ் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றிவந்தவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

பட்வால் நகரத்திலுள்ள குறித்த பொலிஸ் அதிகாரியின் வீட்டுக்குச்




சென்ற கிளர்ச்சிவாதிகள், இவரைச் சுட்டுக்கொன்றனர். இந்தச் சம்பவத்திற்குப் பொறுப்பான கொலையாளிகளைத் தேடிக்கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளதாக நேபாள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த செவ்வாய்க கிழமை தலைநகர் காத்மண்டுவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 38 பேர் காயமடைந்திருந்தனர்.

கடந்த மாதம் நேபாளத்தில் இடம்பெற்ற இந்துப் பண்டிகையொன்றை அடுத்து நேபாள அரசும், கிளர்ச்சிவாதிகளும் எட்டுநாள் போர் நிறுத்தமொன்றை அறிவித்து அதனைக் கடைப்பிடித்து வந்தனர். ஆனால், அந்த தற்காலிக எட்டு நாள் போர்நிறுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து அங்கு மீளவும் வன்செயல்கள் வெடித்துள்ளன.

# ஈ.ராக் பலூஜா நகரில் இருந்து நான்கு பணயக்கைதிகள் மீட்பு



பலூஜா நகர் மீது பாரிய தாக்குதலை ஆரம்பித்துள்ள அமெரிக்க படையினர் பலூஜா நகரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகள் நால்வரை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்டவர்களுள் மூவர் ஈராக்கிலுள்ள இராணுவத் தளமொன்றில் ஒப்பந்த அடிப்படையில் வேலைசெய்தவர்கள் என்றும், மற்றையவர் சாரதி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு பணயக் கைதிகளும் கண்கட்டப்பட்டு, விலங்கு மாட்டப்பட்டுள்ள நிலையில் அறையொன்றினுள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், இவர்கள் நால்வரும் கடந்த பத்து நாட்களுக்கு முன்னர் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டவர்கள் எனவும் அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர்.

பணயக் கைதிகள் நால்வரும் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு போதிய உணவு வழங்கப்படவில்லையெனவும் அமெரிக்க கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்தார். அத்துடன் அமெரிக்க கூட்டுப்படையினர் ஆறு தீவிரவாதிகளையும் கைது செய்துள்ளனர்.

பணயக் கைதிகள் தங்கியிருந்த கட்டடத்திலிருந்து பெருமளவு வெடிபொருட்கள், கறுப்பு நிறச் சீருடைகள், கணினிகள் ஆகியவற்றையும் அமெரிக்கப் படையினர் கைப்பற்றினர்.

# பேச்சுக்கள் குறித்த நிலைப்பாட்டை...

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே அனுசரணையாளர் மூலமாக விடுதலைப்புலிகளுக்கு ஒரு விசேட செய்தியொன்றை அனுப்பிவைப்பார் என ஒரு பொதுவான கருத்து நிலவியது. ஆனால், உண்மையில் அவ்வாறான விசேட செய்தி எதுவும் எமக்குத் தெரிவிக்கப்படவில்லை. அவர் தனது பழைய நிலைப்பாட்டையே தெரிவித்தார்.

எந்த இடைக்காலத் தீர்வுத் திட்டமும் ஒரு ஒட்டுமொத்தமான நிரந்தரத் தீர்வின் இணைபிரியாத அங்கமாக அமையவேண்டும் என்ற கருத்தைத்தான் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். எனவே, இது தொடர்பாக நாங்கள் நீண்ட நேரம் பேசி, இறுதியாக நாங்கள் ஒரு செய்தியினை அவருக்கு அனுப்பிவைத்துள்ளோம்.

அதை தற்போது பத்திரிகையாளர்களுக்குத் தெரிவிக்கவேண்டாமெனவும், தாம் அதனை ஜனாதிபதியுடன் கதைத்து, அந்த முடிவை எமக்கு அறிவித்த பின்னர், அது குறித்து எமது கருத்தைத் தெரிவிக்குமாறும் நோர்வே அனுசரணையாளர்கள் எம்மைக் கேட்டுக்கொண்டனர்.

இதுதான் இன்று நடைபெற்ற முக்கியமான விடயமாகும். மற்றையது பொதுவாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. பேச்சுவார்த்தைகளில் நாம் ஏன் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை வலியுறுத்துகின்றோம். அதனை ஒரு நிரந்தரத் தீர்வுடன் இணைத்துப் பேச ஏன் நாம் விரும்பவில்லை என்ற விபரங்கள் குறித்தும் கூட நாம் கலந்துரையாடினோம்.

குறிப்பாக நாம் கூறியது என்னவெனில் -

நிரந்தரத் தீர்வு குறித்து நாம் கடந்த ஐம்பது வருடங்களாக பேசிக்கொண்டு வருகின்றோம். எத்தனையோ வடிவங்களில் பேசியுள்ளோம். சமஷ்டியைப் பற்றி பேசுவதெல்லாம் புதிய விடயமல்ல. ஐம்பது வருடத்திற்கு முன்னரேயே இந்தப் பிரச்சினை எடுக்கப்பட்டது. மற்றையது பல்வேறு வடிவங்களில் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டு, பேசி ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு, அவை நிராகரிக்கப்பட்டு தற்போது இறுதியாக நாம் ஒன்றைத்தான் கேட்கின்றோம்.

அதாவது எமது மக்களுக்கு அவசரமான, மனிதாபிமான வாழ்க்கைப் பிரச்சினைகள் உள்ளன. எனவே, இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒரு இடைக்கால ஒழுங்கொன்றைச் செய்து, அதனடிப்படையில் வெளிநாடுகள் வாக்குறுதியளித்த நிதியுதவிகளைப் பெற்று அவசரமாக எமது மக்களுக்கு ஏதாவது உருப்படியாகச் செய்யவேண்டும். அதற்காகத்தான் நாம் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைக் கேட்கின்றோம்.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையில் சொல்லப்பட்ட சில யோசனைகள் யாப்புக்குள் அடங்காது அல்லது அது தனியரசுக்கான பாதையை அமைக்கும் என அவ்வாறான கருத்துக்கள் இருப்பதென்பது எமக்குத் தெரியும். ஆனால், அதைப்பற்றி வந்து பேசுங்கள். இதை ஒரு வரைபாக வைத்து, இதுதானென்று, இறுதியானதென நாம் கூறவில்லை. இதையொரு அடிப்படையாக வைத்துப் பேச்சுக்களை ஆரம்பியுங்கள்.

பேச்சுவார்த்தை மேசையில் பேசவேண்டிய விடயங்களை நீங்கள் பத்திரிகையாளர்மூலம் அல்லது உங்களது நிபுணர்கள் மூலம் எழுப்பிக்கொண்டிருக்கின்றீர்களே, தவிர இதைப்பற்றி பேச நாம் தயார் என்பதைத்தான் நாம் நோர்வே அனுசரணையாளர்களிடம் சொல்லிவிட்டுள்ளோம்.

ஆனால், அரசாங்கத்தின் நிலைபாடு என்னவெனில் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை என்ற வரம்புக்குள் பேசாமல் ஒரு நிரந்தரத் தீர்வுடன் இணைந்ததாக இந்தத் திட்டத்தைப் பற்றிப் பேசுவோம், நிரந்தரத் தீர்வைப்பற்றி பேசுவோம் என்பதைத்தான் வலியுறுத்துகின்றது.

இது குறித்துத்தான் நீண்ட நேரமாக நாம் கதைத்த பின்னர், இறுதியாக எமது நிலைப்பாடு என்ன, இந்த சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும ஆரம்பிப்பதற்கான ஏதாவது யோசனை உள்ளதா என எம்மைக் கேட்டார்கள். நாங்கள் இதுதான் யோசனை எனத் தெரிவித்தோம். அதைத் தாம் எடுத்துக்கொண்டு போய் ஜனாதிபதியுடன் பேசி முடிவை அறிவிப்பதாகத் தெரிவித்துவிட்டுச் செல்கின்றனர்.

இன்று கொழும்பு சென்றவுடன் பேசி, உடனடியாக முடிவு எங்களுக்குத் தெரியப்படுத்தப்படும். ஏனெனில் வெளிவிவகார அமைச்சர் உடனடியாகக் கெய்ரோவிற்கு செல்கின்றார். ஏனெனில் அரபாத்தின் மரணச் சடங்கு தொடர்பான வைபவமொன்று கெய்ரோவில் நடப்பதனால் நாளைக்கு (இன்று) கெய்ரோ செல்கின்றார். அதற்கு முதல் இது குறித்துக் கதைத்து இன்று விரைவாக அறிவிப்பதாகத் தெரிவித்தார்.

இந்தியாவுடன் சேர்ந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுவிட்டு அதனை நாம் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் எமக்கு இல்லை. அது இரண்டு அரசாங்கங்கள் மத்தியிலுள்ள கருத்து, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இடைக்கால நிர்வாக சபைக்கு ஒரு ஆணை கொடுத்துள்ளார்கள். 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்துவிட்டுள்ளனர். இதைப் பற்றிப் பேசவேண்டுமென சொல்லியிருக்கின்றார்கள். இவ்வாறு மக்கள் ஆணைபெற்ற ஒரு தீர்வுத் திட்டம், இந்த திட்டத்தைப் பற்றிப் பேசுவதில் எவ்வித சிக்கலுமில்லை.

அந்தத் திட்டத்தில் ஏதாவது பிரச்சினை இருந்தால், அது தனியாட்சிக்கு வழிகோலுதோ அல்லது அதற்குள் இருக்கும் யோசனைகள் வந்து அரசியல் யாப்பை மீறுதோ என்று சொன்னால் அதைப்பற்றி நாம் பேசுவோம்.

*கேள்வி :-* சமஷ்டி முறையிலான ஒரு தீர்வுக்கு முன்வருவோம் என்று பிரபாகரன் உறுதிமொழி அளித்தால் விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தலாமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

*பதில் :-* இதில் ஒரு சிக்கலும் உள்ளது. அது என்னவெனில் பிரபாகரனின் கொள்கைத் திட்டங்கள் அதாவது இயக்கத்தின் கொள்கைத் திட்டங்கள் அவரது மாவீரர் தின அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்படுகிறது. ஆகவே நீங்கள் ஒவ்வொருமுறையும் அவரது மாவீரர்தின அறிக்கையை வாசித்துப் பார்த்தால் தெளிவாகத் தெரியும்.

அதாவது, நாங்கள் எந்தக் காலத்திலும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில்தான் எமது பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென்று கேட்கின்றோம். அது அரசியல் ரீதியான தீர்வாக இருந்தாலென்ன, தனி அரசை நிர்மாணிப்பதாக இருந்தாலென்ன சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில்தான்.

அவர் என்ன சொன்னவரெனில் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர் தாயகத்தில் ஒரு தன்னாட்சி அதிகாரமுடைய ஒரு சுயாட்சி தரப்பட்டால் அதனைப் பரிசீலனை செய்வோம். ஆனால், அதனையும் நிராகரித்தால் நாங்கள் வெளியகச் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனியரசு அமைப்பதைத்தான் இறுதி ஆயுதமாகக் கைக்கொள்வோம் எனக் கூறியுள்ளார்.

ஆகவே, பிரபாகரனின் விளக்கத்திலும் இயக்கத்தின் கொள்கைத் திட்டத்தின்படியும், உள்ளக, வெளியக அம்சங்களைக்கொண்ட சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில்தான் நாம் எமது கொள்கைத் திட்டங்களை வகுத்துள்ளோம். மற்றையது ஒஸ்லோவில் ஒரு பிரகடனம் என்று வருகிறது. அவ்வாறு ஒரு பிரகடனம் இல்லை.

ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடந்தன. ஒவ்வொரு சுற்றுப் பேச்சு முடிவிலும், இந்த முடிவுகளைக்கொண்ட ஒரு பத்திரிகை அறிக்கை வெளியிடுவது வழக்கம். அந்தப் பத்திரிகை அறிக்கையில் நாங்கள் சமஷ்டி ஆட்சிமுறையை ஆராய்வு செய்து பார்ப்போம். பரிசீலனை செய்து பார்ப்போம். அதுவும் எமது தாயகத்தில் எமது மக்களின் சுயாட்சி அடிப்படையில் ஆராய்ந்து பார்ப்போம் என்று ஒரு வசனம் வருகின்றது. அதைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு நாங்கள் தனியரசுக் கோரிக்கையைக் கைவிட்டுள்ளோம் என வாதாடுவது தவறு. அதனையும் நாம் இவர்களுக்கு விளங்கப்படுத்தியுள்ளோம்.

எனவே, இவ்வாறான வியாக்கியானங்கள் கொடுப்பதும் தவறு. ஏனெனில், எங்களது கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் எங்களது உண்மையான கொள்கைப் பிரகடனம் இதுதான். அதுவும் பிரபாகரனது மாவீரர் தின அறிக்கையில் வருவதனைத்தான் முக்கியமாக எடுக்கவேண்டும்.

*கேள்வி :-* இன்று நடைபெற்றுள்ள பேச்சுவார்த்தைகள் மூலம் உடனடியாகப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான சமிக்ஞைகள் அல்லது திருப்திகரமான உணர்வுகள் ஏதாவது உங்களுக்கு ஏற்பட்டுள்ளதா?

*பதில் : -* அந்த சமிக்ஞைகளை நாம்தான் கொடுக்கின்றோம். தற்போது நாம் என்ன கூறுகின்றோமென்றால் - சரி உள்ளகம், வெளியகம், சமஷ்டி எல்லாவற்றையும் விடுங்கோ. எங்களது மக்களின் பிரச்சினை அவசர, மனிதாபிமான வாழ்க்கைப் பிரச்சினை. இதைத் தீர்ப்பதற்கு ஒரு இடைக்கால ஒழுங்கையாவது செய்து தாருங்கள்.

சர்வதேச உலகம் பெரிய நிதியை ஒதுக்கிவைத்துள்ளது. எங்களுடைய மக்கள் தொடர்ந்தும் பாரிய துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே, நாம் எழுத்தில் கொடுத்த தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் பேச்சை நடாத்தி ஒரு முடிவிற்கு வருவோம், பேச்சைத் தொடங்குவோம். இதில் என்ன தவறுள்ளது. அதைத்தான் நாம் இவர்களுக்குக் கூறினோம்.

நாங்கள் நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை. இதைப்பற்றிப் பேசுவோம். ஏன் பேசுகின்றோம் என்பதற்கான விளக்கமும் கொடுத்துள்ளோம். அதனுடன் மக்கள் ஆணையும் உள்ளது. இதற்குமேல் நாம் என்ன செய்வது?

நாம் இறுக்கமான நிலை எதனையும் கடைப்பிடிக்கவில்லை. அவர்கள்தான் நிபந்தனைகளைப் போடுகின்றனர். இப்பவந்து ஒரு நிரந்தரத் தீர்வை வழங்கக்கூடிய ஒரு ஆட்சி அதிகாரம் அங்கு இல்லை. ஜனாதிபதிக்கு இன்னமும் ஒரு வருடம்தான உள்ளது. அதற்குள் யாப்பை மாற்றியமைத்து சமஷ்டி அரசியலமைப்புப்போன்றவற்றைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பும் அங்கு இல்லை. எனவே நிரந்தரத்தீர்வு குறித்துப் பேசுவதற்கு இவர்கள் கேட்பதற்குக் காரணம் என்னவெனில், நிரந்தரத் தீர்வும் கிடையாது, இடைக்காலத் தீர்வும் கிடையாது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கிரனைட் தாக்குதலை நடத்தியவர் பிடிபட்டார்

மட்டக்களப்பு - களுவங்கேணி வந்தாறுமூலை வீதியில் நேற்று மாலை நடைபெற்ற கைக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் அருச்சுனன் விஜயகுமார் என்ற 25 வயது இளைஞரை ஏறாவூர் பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்த வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்த களுவங்கேணி கிராமவாசிகள் இருவர் மீது மறைந்திருந்து குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட பின்னர் அவர்களுடைய மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு தப்பியோடிய போது பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் வீதித்தடையில் வைத்து இவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். குறித்த இளைஞர் ஏற்கனவே புலிகள் அமைப்பில் இருந்தவர் என் றும் தற்பொழுது ஈ.பி.டி.பி அலுவலகத்துடன் தொடர்புடையவர் என்றும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இராணுவத் தளபதிக்கு சேவைநீடிப்பு

இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொடவுக்கு ஜனாதிபதி சந்திரிகா ஒரு வருட சேவை நீடிப்பை வழங்கியிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. 30 வருடங்களாக இராணுவத்தில் பணியாற்றும் லெப்ரினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட தனது 55 ஆவது வயுதைப் பூர்த்தி செய்து ஓய்வுபெறவிருந்த நிலையிலேயே இந்த சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## பலஸ்தீன அதிபர் அரபாத்...

பாத்தின் மூளை பாதிப்படைந்து செயலிழந்து வருவதாக வைத்தியர்கள் தெரிவித்தபோது இறுதி வரை பேர்சில் மருத்துவமனை வைத்தியர்களால் அரபாத்தின் நோயினைக் கண்டறிய முடியவில்லை.

அரபாத்தின் உயிர் பிரிந்ததையடுத்து ரமலாவிலுள்ள பலஸ்தீன அதிகாரசபைத் தலைமைக் காரியாலயத்தில் பலஸ்தீனக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

பலஸ்தீன மக்கள் எங்கள் தந்தை இறந்துவிட்டார் என தெருக்களில் இறங்கி கோஷமிடுவதுடன் அவர்கள் அனைவரும் ஆழ்ந்த சோகத்திலும் மூழ்கியுள்ளனர்.

யாசிர் அரபாத்தின் உடலை ஜெருசலேமில் அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாதென இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்துள்ள நிலையில், அவரது உடல் ரமலாவிலுள்ள பலஸ்தீன அதிகாரசபையின் தலைமைக் காரியாலய வளாகத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

ஆனால், தற்பொழுது அரபாத்தின் உடல் எகிப்தின் தலைநகர் ஹெய்ரோவில் அரபுத் தலைவர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. ஹெய்ரோவின் சர்வதேச விமானநிலையத்திற்கு அருகில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் வைக்கப்படும் அரபாத்தின் உடலிற்கு அரபுத் தலைவர்கள் இறுதி மரியாதை செலுத்துவர்.

இவ் இறுதி மரியாதை செய்யும் நிகழ்வுகள் நிறைவடைந்ததும் ரமலாவில் உள்ள அரபாத்தின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு ஹெலிகொப்ரர் மூலம் எடுத்துச் செல்லப்படும் அரபாத்தின் உடல் அங்கு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட கல்லறையினுள் அடக்கம் செய்யப்படும்.

என்றோ ஒருநாள் சுதந்திர பலஸ்தீனத்தின் தலைநகராக ஜெருசலேம் வருமீ என்றும், அந்த வேளையில் அரபாத்தின் உடல் ஜெருசலேமிற்கு எடுத்துச்செல்லப்படும் எனவும் பலஸ்தீன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரபாத்தின் மரணத்தினை அடுத்து அரபாத்திடம் இருந்த அதிகாரங்கள் அவரது உதவியாளர்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. பலஸ்தீன முன்னாள் பிரதமர் ம.்.மூட் அப்பாஸ் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேசமயம் றவ்ஹி பத்தூஸ் சௌவ்ரன் பலஸ்தீன அதிகாரசபையின் தலைவராகச் செயற்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் உள்ள நாடுகள் ஒவ்வொன்றும் அரபாத்தின் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காகத் தமது பிரதிநிதிகளை அனுப்பி வைக்கவுள்ளன.

### யாசிர்...

அவர் மேலும் தெரிவிக்கையில்- பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு விடுதலைப் புலிகள் அமைப்பு பூரண ஆதரவைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழீழ மக்களும் முழுமையான ஆதரவை வழங்கிக்கொண்டிருக்கின்றனர்.

அரபாத்தின் இறப்பு பலஸ்தீன மக்களுக்கு ஓர் பேரிழப்பு. அதற்காக நாம் ஆழமாக வருந்துகின்றோம். இந்த இக்கட்டானவேளையில் அவா காலமாகியதையிட்டு நாம் வருந்துகின்றோம்.

ஆனாலும் பலஸ்தீன போராட்டம் தொடர்ந்தும் நடைபெறவேண்டும். பலஸ்தீன மக்களுக்கு சுதந்திரம் கிடைக்கவேண்டும் என்பதில் நாம் உறுதியான நம்பிக்கையுடன் இருக்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### கலந்துரையாடல்

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசிப்பதால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று மன்னாரில் நடைபெறவுள்ளது.

கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தலைமையில், தள்ளாடி இராணுவ முகாமில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில், வன்னி மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க, மன்னார் மாவட்ட பொலிஸ் மற்றும் படை உயரதிகாரிகள், மன்னார் மாவட்ட அரச அதிபர், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (03)

### நான்கு...

செயலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். காலை 11 மணியளவில் சமாதான செயலகத்தில் புலிகள் தரபபுக் குழுவினருக்கும் நோர்வே அனுசரணையாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஆரம்பமாகியது.

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடன் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அடேல் பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நோர்வே அனுசரணையாளர் தரப்பில் - வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், விசேட சமாதனாத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் பங்கேற்றனர்.

மதிய உணவின் பின்னரும் இந்தச் சந்திப்பு நீண்டநேரமாக நடைபெற்றது. மாலை 3.15 மணிவரை நீடித்த இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து சுமார் 4 மணியளவில் நோர்வேத் தூதுக்குழுவினர் புலிகள் தரப்பு யோசனையுடன் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

# பேச்சுக்கள் குறித்த நிலைப்பாட்டை...

வெளிநாடுகள் வாக்குறுதியளித்த பணத்தை எடுத்து தென்னிலங்கையை வளர்த்தெடுப்பதுதான் இவர்களின் நோக்கம்.

*கேள்வி :-* இந்தமுறை மாவீரர் தின உரையில் தலைவரால் ஒரு காலக்கெடு (**dead line**) முன்வைக்கப்படுமா? அதாவது குறுகிய காலத்திற்குள் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும் என குறித்த காலக்கெடு விதிக்கப்படுமென எதிர்பார்க்கலாமா?

ஏனெனில், பேச்சுவார்த்தை இழுபட்டுக் கொண்டுசெல்வதால் சில உள்ளகப் பிரச்சினைகளை அரசாங்கம தூண்டிவிடுகின்றது. எனவே, இவ்வாறான குழப்பங்களுக்கு முடிவுகாண வேண்டுமெனில் ஒரு தடை ஒன்று வேண்டும். அதற்காகவே?

*பதில் :-* தலைவர் என்ன சொல்லப்போகிறார் என்பதனை நான் கூற முடியாது. அது அவராக யோசித்து இன்றைய புறநிலைகள் குறித்து ஆராய்வு செய்து, அவர் ஒரு அறிக்கை விடுவார். அதுவும் 27 ஆம் திகதி வருகின்றது. அதற்கு முதல் என்னமாதிரி அவர் எழுதுவார், எப்படி வெளியிடப் போகின்றார் என்பது குறித்து நாம் தற்போது கருத்துக்கூறமுடியாது.

ஆனால், இவ்வாறான யோசனைகளையும் அவர் பரிசீலனை செய்யக்கூடும்.

*கேள்வி : -* இது சம்பந்தமாக நீங்கள் என்ன யோசிக்கின்றீர்கள்?

பதில் : தலைவரின் அறிக்கைதான் முக்கியம். அவரின் மாவீரர் தின அறிக்கையில்தான் இயக்கத்தின் கொள்கைத் திட்டங்கள் தெளிவாக விளக்கப்படும்.

*கேள்வி :-* போர்நிறுத்த ஒப்பந்தச் செயற்பாடுகள் தற்போதைய நிலைமையில் எப்படி உள்ளன?

*பதில் :-* அதில் நிறையப் பிரச்சினைகள் உள்ளன. போர்நிறுத்த ஒப்பந்தம் இருந்தாலும் அதிலுள்ள கடப்பாடுகளை செம்மையாக அரச படைகள் கடைப்பிடிப்பதில்லை. உங்களுக்குத் தெரியும் கடலில் பிரச்சினைகள் உள்ளன. மீனவர்கள் தாக்கப்படுகின்றார்கள். சில இடங்களில் மீன்பிடிக்கத் தடைகள் உள்ளன. மற்றும்படி இவர்கள் வாக்குறுதி அளித்தமாதிரி தாங்கள் நிலைகொண்டுள்ள பொது இடங்களில் இருந்து இராணுவம் விலகவில்லை. இதனால் பல இலட்சக் கணக்கான மக்கள் தங்களது இல்லங்களுக்கும், கிராமங்களுக்கும் திரும்பிப்போக முடியாமல் அவதிப்பட்டுவருகின்றனர்.

ஆகவே, போர் நிறுத்தம் என்ன செய்துகொண்டிருக்கிறதெனில் யுத்தத்தைத் தடுத்து வைத்திருக்கின்றதே தவிர அதனால் ஒரு இயல்பு நிலையை உருவாக்கக்கூடிய சாத்தியக்கூறுகளோ, அல்லது மக்கள் துன்புறுத்தப்படுவதைத் தடுப்பதற்கான சூழ்நிலைகளோ இல்லை.

ஆனாலும், எவ்வளவு ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் மத்தியிலும் நாங்கள் பொறுமையாக இருந்து போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்றோம். அதற்குக் காரணமென்னவெனில் நாங்கள் இன்னமும் சமாதான முயற்சியில் உறுதியாக இருப்பதென்பதனை உலகத்திற்கு எடுத்துக் காட்டுவதற்காக இந்தப் போர்நிறுத்த உடன்படிக்கையை மீறாமல் அதனைப் பேணிக்கொண்டிருக்கின்றோம்.

*கேள்வி :-* ஜனாதிபதி இந்தியாவிற்குச் சென்றபோதும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளை சந்திக்கின்றபோதும், பேச்சுவார்த்தை மேசைக்குப் புலிகள் வருகின்றார்கள் இல்லையென்ற ஒரு காரணதை முன்வைத்துக்கொண்டிருக்கின்றார். ஆகவே, அது சர்வதேச மட்டத்தில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்குப் புலிகள்தான் தடையாக உள்ளனரென்ற ஊகத்தை ஏற்படுத்துகின்றதல்லவா?

*பதில் :-* அவ்வாறான ஒரு நோக்கோடுதான் அவர் இதனைச் செய்கின்றார். ஆனாலும், நாமும் சும்மா இருக்கவில்லை. உதாரணமாக தமிழ்ச்செல்வனுடன் சேர்ந்த அரசியல்குழு வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று, உண்மையான நிலைமையை வெளிநாடுகள், ஐரோபபிய நாடுகளுக்கு எடுத்து விளக்கியுள்ளது. மற்றையது எமது நிலைப்பாட்டில் எவ்வித சிக்கலும் இல்லை. ஒரு இடைக்காலத்திற்கான திட்டத்தை எழுத்தில் கொடுத்துவிட்டு, இதைப்பற்றிப் பேசுவோம் எனக் கேட்டுக்கொண்டு நிற்கின்றோம். வேறு நாம ஒன்றும் செய்யவில்லை.

பேச்சுக்கு வரமாட்டோம் என்றும், நாம் கூறவில்லை. இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக ஜனாதிபதி பேசத்தயார் எனில், இன்றும் நாம் தயார். யார் மாட்டாதென்று கூறியது. நாம் சமாதானக் கடையைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறம். வியாபாரம் நடைபெறவில்லை. ஜனாதிபதி வந்து சாமான் வாங்கவல்லோ வேண்டும்.

*கேள்வி :-* பேச்சு இழுபட்டுச் செல்வதனால் யுத்தம் ஒன்று வருமென மக்கள் கருதுகின்றார்கள். அதுகுறித்து உங்களது கருத்தென்ன?

*பதில் :-* மக்களுக்கு யுத்தம் வருவது விருப்பமில்லை. ஒருவருக்கும் யுத்தம் விருப்பமில்லை. ஆனால், நீங்கள் யுத்தம் வந்தால் என்ன என்று ஆசைப்படுகின்றீர்கள். தற்போது நாங்கள் இந்தப் போர் நிறுத்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்து வருவதற்கான காரணமே யுத்தத்தைத் தவிர்ப்பதற்காகவாகும்.

ஆனாலும், யுத்தத்திற்கான புறநிலையை அரசாங்கம் உருவாக்கிக்கொண்டு வருகின்றது. அத்தனையும் நாம் நிராகரிக்கக்கூடாது.

ஏனெனில், தொடர்ந்து அரசாங்கம் பெருமளவு நிதியைப் பாதுகாப்புச் செலவினங்களுக்காகச் செலவிட்டுள்ளது. 500 மில்லியன் டொலருக்குமேல் வழமையாக செலவிட்டுக்கொண்டுவருகின்றார்கள். இராணுவ ஒப்பந்தங்களைச் செய்ய முயற்சிக்கினம். ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவிக்கின்றார்கள். படைக்கு ஆட்களைச் சேர்க்கின்றார்கள். இவ்வாறு போருக்கான தயாரிப்பு வேலைகளை அரசாங்கம் செய்கின்றது. இது உண்மை.

ஆகவே, போர் ஒரேயடியாக நின்று போகவில்லை. அதற்கான ஆயத்தங்களை அரசாங்கம் செய்கின்றது. எமது மக்களும் ஏன்? சிங்களவர் கூட இந்தப் போரை விரும்பவில்லை. ஆனால், இவ்வாறு நீடித்துக்கொண்டு செல்வதையும் விடமுடியாது. ஏனெனில், அதிலும் பெரிய சிக்கல்கள் உள்ளன.

*கேள்வி :-* எரிபொருள் வணிகம் இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம், சேது சமுத்திரத் திட்டம் போன்ற செயற்பாடுகளின் ஊடாக இந்தியாவின் பங்களிப்பு அல்லது தலையீடு இலங்கையில் அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படுகின்றது. இந்தப் போக்கு சமாதான முயற்சிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கருதுகின்றீர்களா?

*பதில் :-* இதில் நாம் ஒரு விடயத்தை மட்டும் தற்போது தெளிவாகக் குறிப்பிடலாம். அதாவது, இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக ஏற்கனவே சில கருத்தை நாம் தெரிவித்துள்ளோம். அவ்வாறு இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யப்பட வேண்டிய அவசியம் இப்போதைக்கு இல்லை.

ஏனெனில், இந்த ஒப்பந்தம் செய்யப்படுவதற்கான புறநிலையும் தோன்றவில்லை. இது ஒரு சமாதான சூழ்நிலை இங்குள்ளது. மற்றும்படி இலங்கைக்கு ஒரு அந்நியத் தலையீடு, அந்நிய ஆக்கிரமிப்புக்கான, அச்சுறுத்தலுக்கான சூழ்நிலையும் ஏற்படவில்லை.

அதேவேளை- இந்தியா இலங்கைக்கு சில உதவிகளை செய்கின்றது என்பதும் எங்களுக்குத் தெரியும். இராணுவப் பயிற்சி, ஆயுத உதவி, புலனாய்வுப் பகிர்வு போன்ற விடயங்களைச் செய்துகொண்டு வருகின்றது. எனவே, எம்மைப் பொறுத்தவரையில் ஒப்பந்தம் செய்து அதன் அடிப்படையில் பெருமளவில் இலங்கைக்கு ஆயுத உதவிகளை அளிக்க இந்தியா முற்பட்டதெனில், இங்குள்ள இராணுவச் சமநிலை நிச்சயமாகப் பாதிக்கப்படும். இராணுவச் சமநிலைதான் போர் நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படை. அதுவும் பாதிப்படையும். போர் நிறுத்தம் பாதிக்கப்பட்டால் சமாதான முயற்சியும் பாதிக்கப்படும்.

எனவே, இதனை இந்தியாவுக்கு வெளிப்படையாகத் தெரிவித்துள்ளோம். சில தமிழ்நாட்டுத் தலைவர்களும் இந்தப் பிரச்சினையை டெல்கி சென்று கதைத்துள்ளனர். அதன் அடிப்படையில் இந்தியா இந்த ஒப்பந்தத்தைச் செய்வதற்குத் தாமதித்துள்ளது. செய்யமாட்டார்களென்றும் நாம் கூறமுடியாது. ஆனால், தமிழ்மக்களின் உணர்வுகள் இதற்கெதிராக உள்ளதென்பதை இந்திய மத்திய அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். இதற்கு மேல் நாம் எதனையும் குறிப்பிட விரும்பவில்லை.

*கேள்வி:-* தற்போது போரில்லாச் சூழ்நிலையில் இடைக்காலத் திட்ட வரைபு தொடர்பில் பேசமுடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையில் - நீங்கள் அதனைக் கைவிட்டு விடுவீர்களா?

*பதில்:-* நாம் இன்னமும் கைவிடவில்லை. தற்போதும் நோர்வே அரசாங்கமும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இரண்டு பக்கத்திலிருந்தும் புதிதாக சில யோசனைகளை நாம் சொல்லியுள்ளோம். எங்களைப் பொறுத்தவரையில் நாம் பேச்சுக்குத் தயாராகவுள்ளோம். ஆனால், ஒரு இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் பேசுவதென்றால் நாம் தயாராகவுள்ளோம். இதனை நாம் முற்றாகக் கைவிடவில்லை. நோர்வே அரசாங்கமும் தமது சமாதான முயற்சிகளை இன்னமும் கைவிடவில்லை. இவ்வாறான சூழ்நிலைதான் உள்ளது. ஆனால், பொறுத்திருந்து பார்ப்போம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## பணிநிலை வேண்டுகை

**1) ஒவ்செற் அச்சு இயந்திர இயக்குநர்**

**KORD - SOLONA** ஒவ்செற் அச்சு இயந்திரங்களை இயக்கக்கூடிய அனுபவஸ்தர்கள் தேவை.
அனுபவ தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**2) இயந்திர உதவியாளர்கள் – பயிலுனர்கள்**

மேற்படி அச்சு இயந்திரங்களில் உதவியாளர்களாகவும் பழகுநராகவும் பணியாற்ற ஆர்வமுள்ள இளைஞர்கள் தேவை.
உரிய சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**3) சிற்றூழியர்கள்**

அலுவலகத்தில் சிற்றூழியராக பணியாற்ற நல்லொழுக்கமுடையவர்கள் தேவைப்படுகின்றனர்.
ஆர்வமுடையோர் நேரில் வரவும்

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இன்று (12.11.2004) காலை 10.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

ஆளணி முகாமையாளர்
நமது ஈழநாடு
267 நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.